# அச்சிடுதலும் பதிப்பித்தலும்

அச்சிடுதலும் பதிப்பித்தலும்

# பொருளடக்கம்


Title Page
Table Of Contents
P2044. அச்சிடுதலும் பதிப்பித்தலும்
பாட ஆசிரியரைப் பற்றி
பாடம் - 1 P20441 அச்சுப்படி திருத்தமும் குறியீடுகளும்
பாட அமைப்பு
1.0 பாட முன்னுரை
1.1 அச்சுப்படி திருத்தம்
1.2 திருத்தக் குறியீடுகளின் பிரிவுகள்
1.3 தொகுப்புரை

பாடம் - 2 P20442 செம்மையாக்கமும் குறியீடுகளும்
பாட அமைப்பு
2.0 பாட முன்னுரை
2.1 செம்மையாக்கம்
2.2 கவனத்தில் கொள்ள வேண்டியவை
2.3 எழுத்துப் படிகளின் வகைகள்
2.4 அச்சுக் கோத்தல்
2.5 செம்மையாக்கக் குறியீடுகள்
2.6 தொகுப்புரை

பாடம் - 3 P20443 மொழிநடையும் திருத்தமும்
பாட அமைப்பு
3.0 பாட முன்னுரை
3.1 இதழியல் மொழிநடை
3.2 மொழிநடை அமைப்பு
3.3 திருத்தமும் தவிர்த்தலும்
3.4 திருத்தமும் சேர்த்தலும்
3.5 பிற கூறுகள்
3.6 தொகுப்புரை

பாடம் - 4 P20444 இதழ்களின் வகைமையும் குறியீடுகளின் பயன்பாடும்
பாட அமைப்பு
4.0 பாட முன்னுரை
4.1 தமிழ் இதழ்கள்
4.2 இன்றைய இதழ்களின் நிலை
4.3 செம்மையாக்கக் குறியீடுகளின் பயன்பாடு

4.4 தொகுப்புரை

பாடம் - 5 P20445 அச்சிடுதலின் நவீனப் போக்குகள்
பாட அமைப்பு
5.0 பாட முன்னுரை
5.1 அச்சுக்கலையின் வரலாறு
5.2 அச்சுக்கலையின் வளர்ச்சி
5.3 அச்சிடும் முறைகள்
5.4 அச்சுவார்க்கும் பொறிகள்
5.5 படங்களைப் பதிப்பிக்கும் முறை
5.6 அச்சிடுதலில் நவீனப் போக்குகள்
5.7 அச்சிடுவதற்குப் பயன்படும் எழுத்துக்கள்
5.8 தொகுப்புரை

பாடம் 6 P20446 - இயந்திரப் பிரிவு
பாட அமைப்பு
6.0 பாட முன்னுரை
6.1 இயந்திரப் பிரிவு
6.2 பிற பிரிவுகள்
6.3 தொகுப்புரை
P20441 தன்மதிப்பீடு : விடைகள் - I
P20441 தன்மதிப்பீடு : விடைகள் - II
P20442 தன்மதிப்பீடு : விடைகள் - I
P20442 தன்மதிப்பீடு : விடைகள் - II
P20443 தன்மதிப்பீடு : விடைகள் - I
P20443 தன்மதிப்பீடு : விடைகள் - II
P20444 தன்மதிப்பீடு : விடைகள் - I
P20444 தன்மதிப்பீடு : விடைகள் - II
P20445 தன்மதிப்பீடு : விடைகள் - I
P20445 தன்மதிப்பீடு : விடைகள் - II
P20446 தன்மதிப்பீடு : விடைகள் - I
P20446 தன்மதிப்பீடு : விடைகள் - II

# P2044. அச்சிடுதலும் பதிப்பித்தலும்

P20441 அச்சுப்படி திருத்தமும் குறியீடுகளும்
P20442 செம்மையாக்கமும் குறியீடுகளும்
P20443 மொழிநடையும் திருத்தமும்
P20444 இதழ்களின் வகைமையும்
குறியீடுகளின் பயன்பாடும்
P20445 அச்சிடுதலின் நவீனப் போக்குகள்
P20446 இயந்திரப் பிரிவு

# பாட ஆசிரியரைப் பற்றி




முனைவர் வீ. மோகன்

கல்வித்தகுதி : எம்.ஏ (தமிழ்), எம்.ஏ, (இதழியல் & மக்கள் தகவலியல்)
எம்.ஃபில்., பி.எச்.டி., டி.ஜே.

வகிக்கும் பதவி : இணைப் பேராசிரியர்

பணிபுரியும் துறை, மற்றும் கல்லூரி : தமிழ் உயராய்வு மையம்
யாதவர் கல்லூரி, மதுரை-625014


இதழ்கள், ஆய்வுக் கோவைகளில் வெளிவந்த கட்டுரைகள் மற்றும் நூல்கள் வெளியீடு :

- 30 கட்டுரைகள்
- இரண்டு நூல்கள்

1. மக்கள் ஊடகத் தொடர்பியல் அடிப்படைகள்
2. மக்கள் ஊடகத் தொடர்பியல் புதிய பரிமாணங்கள்

பாடத்திட்டக் குழு உறுப்பினர் : மதுரை காமராசர் பல்கலைக்கழக இதழியல் & மக்கள் தகவல் தொடர்புத் துறை உறுப்பினர்.


நிரந்தர முகவரி : முனைவர் வீ. மோகன்
52, வீரமுத்து கார்டன், ஸ்ரீநகர் விசாலம்
ஆனையூர் (அஞ்சல்), மதுரை-625 017
இல்லத் தொலைபேசி எண் (0452) 2642739

# பாடம் - 1 P20441

## அச்சுப்படி திருத்தமும் குறியீடுகளும்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

அச்சுப் படிகளில் உள்ள பிழைகளைத் திருத்துவதற்குப் பத்திரிகைகளில் தனியாக ஊழியர்கள் உள்ளனர். அவர்கள் செய்ய வேண்டிய பணிகள், அச்சுப்படி திருத்தும் முறைகள், அதற்கான குறியீடுகள் பற்றி இந்தப் பாடம் விளக்கியுள்ளது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இதனைப் படித்து முடிக்கும்போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறலாம்.

- ஓர் அச்சுப்படியை எவ்வாறு திருத்த வேண்டும், அதன் முக்கியத்துவம் யாது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

- அச்சுப்படி திருத்தப் புகுவோர் பெறவேண்டிய ஆலோசனைகள், அந்த ஆலோசனைகளால் அவர் பெறும் பயன்பாடு பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

- அச்சுப்படி திருத்தும்போது குறியீடுகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் அறியலாம்.

- அச்சுப்படி திருத்தக் குறியீடுகளைப் பயன்படுத்துவதால், பிழையின்றித் தரமாகச் செய்திகள் வெளிவர அவை உதவுகின்றன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

# பாட அமைப்பு

1.0 பாட முன்னுரை
1.1 அச்சுப்படி திருத்தம்
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
1.2 திருத்தக் குறியீடுகளின் பிரிவுகள்
1.3 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 1.0 பாட முன்னுரை

ஒரு செய்தித்தாளிலுள்ள பல பணிகளில் அச்சுப்படி திருத்துதல் மிகவும் இன்றியமையாதது ஆகும். செய்தித்தாளில் வெளிவரும் ஒரு செய்தி அச்சில் வருவதற்குமுன் ஏற்படும் எழுத்துப் பிழைகள், தொடர்ப் பிழைகள், குறியீட்டுப் பிழைகள், போதிய இடைவெளியின்மை, தேவையான எழுத்தளவின்மை, வாசகரை ஈர்க்கும் கட்டமைப்பின்மை முதலான குறைகள் களையப்பட வேண்டும். இதழ்களில் வெளியிடப்படும் செய்திகள் தரமாகவும் படிக்க எளிதாகவும் இருக்க வேண்டியது அவசியம். பிழைகளைத் திருத்தத் தனியாக ஊழியர்கள் ஒவ்வொரு செய்தி அலுவலகத்திலும் பணியில் அமர்த்தப்படுவது வழக்கம். அத்தகையோர் தனியே இருப்பினும் அவர்களின் பணி செப்பமுற உள்ளதா என்பதைக் கண்டு சரிசெய்யும் பொறுப்பு துணையாசிரியர், இதழாசிரியர் முதலான பிற இதழாளர்களுக்கும் உண்டு. எனவே, இதழ் அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் அனைத்து இதழாளர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டிய முக்கியப் பணிகளுள் அச்சுப்படி திருத்துதலும் அடங்கும்.

அச்சுப்படியைத் தமிழில் ‘மெய்ப்பு‘ அல்லது ‘படி‘ (Proof) என்பர். அச்சுப்படி திருத்துவதை மெய்ப்பு வாசித்தல் (Proof Reading) அல்லது படி திருத்துதல் (Proof Correction) என்றழைப்பர். எழுத்துப் பிழைகளைச் சரிசெய்வது மட்டுமே ஒரு படி திருத்துவோரின் பணியன்று. செய்திகள் மற்றும் தலைப்புகளின் எழுத்தளவு (Font Size), எழுத்துப் புள்ளிகள் (Points) ஆகியவற்றையும் படிதிருத்துவோர் கவனிக்க வேண்டும். மொழியறிவு படைத்தவராகவும், மொழி மரபைக் காப்பாற்றி எந்த வகைப் பிழையும் நேராமல் திருத்தும் பொறுப்புள்ளவராகவும் படி திருத்துவோர் செயல்பட வேண்டும். இதுவே செய்தி இதழின் பெருமைக்கு வழிவகுக்கும்.

## 1.1 அச்சுப்படி திருத்தம்

செய்தித்தாள்களை வெளியிடும்பொழுது பிழையின்றி அச்சிட வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்றாகும். பிழை மலிந்த செய்தித்தாளை யாரும் விரும்பிப் படிக்க மாட்டார்கள். எனவே, செய்தித்தாள்களை அச்சிடுவதற்கு முன்னர் அச்சுப்படி திருத்துபவர் பணியும் அப்பணியின் போது திருத்தக்குறியீடு இடுதலும் பிழைகளைத் திருத்துவதற்குக் கையாளும் முறைகளும் அதற்குரிய அறிவுரைகளும் முக்கியம் வாய்ந்தவைகளாகும்.

### 1.1.1 திருத்துபவரின் பணிகள்

திருத்துபவர்க்குரியவையாக 6 பணிகளைக் குறிப்பிடுவர்.

1)மூலப்படியில் (Original Copy) உள்ளபடியே செய்திகள் அச்சாகியுள்ளனவா என்று வரிக்குவரி வாசித்துக் கவனிக்க வேண்டும்.

2) செய்தியின் உள்ளடக்கம் விடுபட்டுள்ளதா என்பதையும் மூலப்படியோடு ஒப்பிட்டுக் கவனித்தல் முக்கியம்.

3) செய்திகளில் முரண்பாடு இருந்தாலும், தெளிவின்றிப் பொருட் குழப்பம் இருந்தாலும் அதனைத் துணை ஆசிரியரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

4)அனுபவமிக்கவர்கள் அச்சுப்படியை மட்டும் படித்துத் திருத்தலாம். மூலப்படியைத் தேவைப்பட்டால் மட்டுமே பார்த்துக் கொள்ளலாம்.

5) செய்தியில் புள்ளி விவரங்கள் (எண்கள், அட்டவணைகள் முதலியன) வந்தால், அனுபவமிக்கவராக இருந்தாலும் கண்டிப்பாக மூலப்படியுடன் ஒப்பிட்டுப் பார்த்தே திருத்துதல் வேண்டும். புள்ளி விவரங்கள் மாறினால் செய்தியின் பொருள் சீர்குலைந்துவிடும்.

6) அச்சுப்படி திருத்துவோர் அவராகவே செய்தியின் உருவையோ உள்ளடக்கத்தையோ மாற்றக் கூடாது.

- குறியீடுகள் இடுதல்

அச்சுப்படியில் இருக்கும் பிழைகளைத் திருத்த உலக அளவில் பொதுவான திருத்தக் குறியீடுகள் என்று சில உண்டு. உலகின் எல்லா மொழிகளுக்கும் இவை பொதுவானவை. ஓர் அச்சகத்தில் திருத்தியதை மற்றோர் அச்சகத்தார் புரிந்துகொள்ளும் அளவில் இக்குறியீடுகள் உலகப் பொதுவானவையாக இருக்கும். அத்தகைய திருத்தக் குறியீடுகளைப் படிதிருத்துவோர் முதலில் படித்தறிதல் வேண்டும். பிழையிருக்கும் இடத்தில் ஒரு சிறு கோட்டினால் குறித்து அந்த வரிக்கு நேராகப் பக்கத்தின் ஓரப்பகுதியில் (Margin) அந்தக் குறியீடுகளைப் பொருத்தமாக இட்டுப் பிழையின் திருத்தத்தைக் குறிப்பிட வேண்டும். ஒரே வரியில் பல தவறுகள் வந்தால் அவற்றை வரிசைப்படி பக்க ஓரத்தில் சிறு சாய்கோடிட்டுத் திருத்தத்தைக் குறிப்பிட வேண்டும்.

எடுத்துக்காட்டு:

வேளான்/மக்களுக்குத்/தமிள்நாடு அரசு புதிய திட்டம். /ண்/ழ்

### 1.1.2 பிழைகளைத் திருத்தும் முறைகள்

அச்சுப்படியிலுள்ள பிழைகளைத் திருத்த இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவை:

1) அச்சுப்படியில் எந்த இடத்தில் பிழை இருக்கிறதோ அந்த இடத்தில் ஓர் அடையாளக் குறி இடுவர். பின் தாளின் இருபக்கங்களில் பக்கவாட்டில் அதற்கு நேராக, வேண்டிய திருத்தத்தைக் குறிப்பிடுவர்.

2) திருத்த வேண்டிய இடத்திலிருந்து பக்கத்தின் ஓரம் வரை ஒரு கோட்டினை இழுத்து, என்ன திருத்தம் செய்ய வேண்டுமென்பதைக் குறிப்பிடுவர். செய்தித்தாள்களில் இம்முறையைத்தான் பின்பற்றுகின்றனர்.

- திருத்துவோர்க்கான அறிவுரைகள்

1) பின்வரும் தொடர்களின் அமைப்புப் பாதிக்காமல் திருத்தங்கள் செய்வது நல்லது.

2) திருத்தங்களைப் பக்கத்தின் ஓரத்தில்தான் தர வேண்டும். பிழையின் மீதே எழுதக் கூடாது.

3)ஒரு வரியின் இடது பாதியில் பிழை இருந்தால் இடது ஓரமும், வலது பாதியில் பிழை இருந்தால் வலது ஓரமும் திருத்தம் தருதலே சிறந்தது.

4) பிழைகளை ஓரம் வரை கோடிழுத்துக் காட்டும் பொழுது மேலும் கீழும் உள்ள வரிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

5) ஒரே வரியில் ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருந்தால் பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்ட வேண்டும். கோடுகளின் மூலம் அச்சுக் கோப்பவரைக் குழப்பக் கூடாது.

6) ஒரு சொல்லில் பல பிழைகள் இருந்தால் அச்சொல்லையே நீக்கிவிட்டுச் சரியான சொல்லைத் தெளிவாகப் பக்க ஓரத்தில் தருதல் நலம்.

7) எண்ணின் (Number) இடையில் பிழையிருந்தால் அந்தத் தொகையை முழுவதுமாகப் பிழையின்றி எழுதிக்காட்டுதல் சிறந்தது.

8) செய்தியின் வடிவம், எழுத்தின் அளவு ஆகியவற்றையும் பிழைதிருத்துபவர் கவனத்தில் கொள்வது இன்றியமையாதது. அதையும் பக்க ஓரத்தில் குறிப்பிட்டுக் காட்டுவது சரியான முறையாகும்.

9) பிழைகள் திருத்தப்பட்ட அச்சுப்படி தெளிவாக இருக்க வேண்டும். குழப்பம் தரும்படி இருத்தலாகாது.

10) அச்சுப்படி கருப்பு மையில் இருந்தால் பிழை திருத்துவோர் சிவப்பு மையால்

திருத்துவது பிழைகளைத் தெளிவாகக் கண்டறிய உதவும்.

## தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 1.2 திருத்தக் குறியீடுகளின் பிரிவுகள்

பிழைகள் உள்ள அச்சுப்படியைத் திருத்துவதற்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான குறியீடுகள் (Symbols) உள்ளன. இவை இந்திய மொழிகளிலும் ஆங்கில மொழியிலும் கையாளப்படுகின்றன.

அச்சுப்படி திருத்தக் குறியீடுகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். அவை:

(1) பொதுவானவை (General)

(2) நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை (Punctuations)

(3) இடைவெளி தரவேண்டியவை (Spacing)

(4) இணைக்க வேண்டியவை (Alignment)

(5) எழுத்து வடிவம் (Type/Font)

என்பவையாகும்.

### 1.2.1 பொதுவானவை

Dt - அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குக.

Stet - ஏற்கெனவே உள்ளது போலவே இருக்கட்டும்.

^ - சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்க.

x - சரியாக விழாமல் உள்ள எழுத்துக்களை மாற்றுக.

// - செங்குத்தாக உள்ளவற்றைச் சரிசெய்க.

[ - புதிய பத்தி (New Paragraph) தொடங்குக.

### 1.2.2 நிறுத்தக் குறியீடுகள்

,/ - கால் புள்ளியைச் சேர்க்கவும்.

;/ - அரைப் புள்ளியைச் சேர்க்கவும்

./ - முற்றுப்புள்ளி இடவும்.

?/ - கேள்வி அடையாளம் இடவும்.

!/ - ஆச்சர்யக் குறியைச் சேர்த்துகொள்ளவும்.

:/ - இரண்டு புள்ளிகளைச் சேர்க்கவும்.

‘/ - ஒற்றை மேற்கோள் அடையாளம் இடவும்.

### 1.2.3 இடைவெளி தரவேண்டியவை

() - சொற்களை அல்லது எழுத்துகளைச் சேர்க்க. இடைவெளி விட வேண்டாம்.

# - பத்திகளுக்கிடையில், வரிகளுக்கிடையில் அல்லது சொற்களுக்கிடையில் இடைவெளி தருக.

### 1.2.4 இணைக்க வேண்டியவை

⊐ - இடது பக்கம் தள்ளவும்

⊏ - வலது பக்கம் தள்ளவும்

T - மேலே உயர்த்தவும்

⊥ - கீழே தள்ளவும்

⌒ - பத்திகளை இணைக்கவும்

I - சொல்லைப் பிரித்துத் தரவும்

‘ - ஒற்றை மேற்கோள் குறியீடு இடுக

“ - இரட்டை மேற்கோள் குறியீடு இடுக

### 1.2.5 எழுத்து வடிவம்

S.C - பெரிய எழுத்தில் உள்ளதைச் சிறிய எழுத்தில் மாற்றுக

Caps - பெரிய எழுத்தில் மாற்றுக

bold - தடித்த எழுத்தில் மாற்றுக

trs - வார்த்தைகள், எழுத்துகளை மாற்றுக

l.c. - சிறிய எழுத்தில் அச்சிடுக

அச்சுப்பிழை திருத்துவோர் அச்சுப்படியில் பிழையுள்ள இடத்தில் ஒரு சாய்ந்த கோடிட்டு (/) அடித்தல் வேண்டும். வலது, இடது பக்க ஓரங்களில் அச்சுப் பிழை திருத்திக் குறியீடுகளை எழுதி என்ன திருத்தம் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

## 1.3 தொகுப்புரை

ஒரு பத்திரிகையின் தொடர்கள் பிழைகள் இல்லாமல் தரமானதாக இருக்க வேண்டுமானால், செய்திகள் அடங்கிய பிழையுள்ள அச்சுப்படியைக் கவனமாகத் திருத்த வேண்டும். பிழைகள் அதிகமாக உள்ள பத்திரிகையை நாளடைவில் மக்கள் புறக்கணிக்க முற்படுவர். அதனால் ஒரு பத்திரிகையின் ஆசிரியர், துணை ஆசிரியர்களுக்குரிய பணிகள் எவ்வளவு முக்கியமானதோ அதுபோலவே, அச்சுப்படி திருத்துவோரின் பணியும் இன்றியமையாததாகும். படிதிருத்தும்போது மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டும். ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்கும் விற்பனைப் பெருக்கத்திற்கும் தரமாக வெளிவருவதற்கும் அச்சுப்படி திருத்துபவரின் பணியும் மிகவும் முக்கியமானது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 2

## P20442 செம்மையாக்கமும் குறியீடுகளும்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

ஒரு பத்திரிகைக்குப் பல்வேறு இடங்களிலிருந்து வருகின்ற செய்திகளை எவ்வாறு பிழைதிருத்தி, தேவையில்லாதவற்றைக் குறைத்து, இன்னும் தேவையானவற்றைச் சேர்த்துச் செம்மையாக்கம் (editing) செய்து நிறைவான செய்தியாக வெளியிடுகின்றனர் என்பதனை இந்தப் பாடம் விளக்குகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- ஒரு பத்திரிகைக்குக் கிடைக்கக்கூடிய செய்திகளை எவ்வாறு செம்மையாக்கம் செய்கின்றனர் என்பதை அறியலாம்.

- ஒரு பத்திரிகையின் தரத்தைச் சிறந்த செம்மையாக்கமே உயர்த்த முடியும் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

- ஒரு பத்திரிகையை வெளியிடுவதற்கு முன் அதன் ஆசிரியரோ துணையாசிரியரோ செம்மையாக்கம் தொடர்பாக அறிந்து செயல்படவேண்டிய இன்றியமையாத கடமைகளை அறிந்து கொள்ளலாம்.

- பத்திரிகைச் செய்திகளில் பயன்படுத்தப்படுகின்ற செம்மையாக்கக் குறியீடுகளை அறியலாம்.

# பாட அமைப்பு

2.0 பாட முன்னுரை
2.1 செம்மையாக்கம்
2.2 கவனத்தில் கொள்ள வேண்டியவை
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
2.3 எழுத்துப் படிகளின் வகைகள்
2.4 அச்சுக் கோத்தல்
2.5 செம்மையாக்கக் குறியீடுகள்
2.6 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 2.0 பாட முன்னுரை

இதழியல் பணியில் மிகவும் சிறப்பிடம் பெறுவது செம்மையாக்கமாகும். பத்திரிகையின் (நாளிதழ், பருவ இதழ்கள் அனைத்தையும் சேர்த்துப் ‘பத்திரிகைகள்’ என்றே கூறலாம்.) இறுதி வடிவமே வாசகரைச் சென்றடைகிறது. அதனால் செய்திகளைச் செம்மைப்படுத்த அதிகக் கவனம் செலுத்த வேண்டும். உலகின் நான்கு பக்கங்களிலிருந்தும் (North, East, West, South = NEWS) பத்திரிகை அலுவலகத்திற்குப் பல்வேறு செய்திகள் வருகின்றன. அவற்றை வகைதொகைப்படுத்தி வாசகர்கள் விரும்பும் வகையில் பத்திரிகையை வெளியிடுவதே செம்மையாக்கம் (Editing) என்பதாகும். செம்மையாக்கம் செய்பவர் ஒரு பத்திரிகையின் ஆசிரியராகவோ (Editor) அல்லது துணை ஆசிரியராகவோ (Sub-editor) இருப்பார். சில பத்திரிகைகளின் ஆசிரியரே உரிமையாளராகவும் இருப்பார். பத்திரிகையின் உரிமையாளரே ஆசிரியராக இருந்தால் செம்மையாக்கப் பணியை அவரது நம்பிக்கையைப் பெற்ற ஒரு துணையாசிரியர் செய்வார்.

## 2.1 செம்மையாக்கம்

பத்திரிகை அலுவலகத்திற்கு அதிகச் செய்திகள் வருகின்றன. அவை அனைத்தையும் பத்திரிகைகளில் வெளியிட முடியாது. அவற்றுள் தேவையான செய்திகளைத் தேவையான அளவு தேர்ந்தெடுத்து, தம் வாசகருக்குப் பழக்கமான மொழி நடையில், அவர்கள் எளிதாகப் படித்து உள்வாங்கும் வகையில் சுவையாக வடிவமைத்துப் பதிப்பிக்கின்ற பணியே செம்மையாக்கமாகும்.

### 2.1.1 அகராதி தரும் விளக்கம்

செம்மையாக்கத்தை ஆங்கிலத்தில் ‘எடிட்டிங்’ (Editing) என்று கூறுவர். ‘எடிட்’ என்ற ஆங்கிலச் சொல்லிற்குப் ‘பதிப்பி, பதிப்பிற்கு வேண்டிய முறையில் திருத்தி அமை, பத்திரிகைப் பதிப்பாசிரியராய் இருந்து பணியாற்று’ என்று ஆங்கில-தமிழ் அகராதி (சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பு) விளக்கம் தருகின்றது.

### 2.1.2 பிற விளக்கங்கள்

செய்திகளைத் தேர்ந்தெடுத்துச் சரியான முறையில் மாற்றித் திருத்தி, வகைப்படுத்தி, தொகுத்து, இறுதி வடிவம் தருவதைச் ‘செம்மையாக்கம்’ எனலாம்.

1)தங்கத்தை உருக்கி வடிவமைப்பது போலச் செய்திகளைத் தேர்ந்தெடுத்துச் சரிசெய்து, வாசகர் படிப்பதற்குத் தகுந்தவாறு வெளியிடச் செப்பனிடும் பணியே செம்மையாக்கம் என்பதாகும்.

2)எழுத்துப் பிழை, தொடர்ப்பிழை, கருத்துப்பிழை போன்ற பிழைகள் இருப்பின் அவற்றைச் சரிசெய்தல்.

3)சட்டப்படி பார்த்தால் சிக்கல்களை உருவாக்கக்கூடிய பகுதிகளை நீக்குதல்

4)வாசகர்கள் புரிந்துகொள்ளக் குழப்பமாக இருக்கும் என்று ஆசிரியர் நினைக்கும் பகுதிகளைத் தெளிவு செய்தல்.

5)செய்தியின் அளவைத் தேவைக்கு ஏற்பக் குறைத்தல் அல்லது விரித்தல்.

6)அச்சுப்படி திருத்துவோர் அவராகவே செய்தியின் உருவையோ உள்ளடக்கத்தையோ மாற்றக் கூடாது.

போன்ற பணிகளை உள்ளடக்கியதே செம்மையாக்கமாகும்.

செய்தியின் தலைப்பு, செய்தி முன்னுரை, உடல் பகுதி ஆகிய மூன்றுமே செம்மையாக்கத்தில் மிகவும் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

## 2.2 கவனத்தில் கொள்ள வேண்டியவை

1) செய்திகளைப் புரியும்படி தருதல்,

2) செய்திகளைச் சிதைத்தல் கூடாது.

3) சிக்கல் ஏற்படும்போது கவனம்.

4) பத்திரிகையின் மதிப்பு உயரக் கையாளும் நடவடிக்கை.

5) ஐயமான செய்தியெனில் வெளியிடாமல் அகற்றிவிடல்

6) செய்தி முக்கியத்துவத்திற்கு ஏற்ப இட ஒதுக்கீடு.

7) செய்தியின் மூல ஆதாரங்களை ஆராய்தல்

முதலியன செம்மையாக்கம் செய்பவர் கவனத்தில் கொள்ள வேண்டியவற்றுள் முக்கியமானவையாகும்.

### 2.2.1 புரியும்படி தருதல்

நீண்ட செய்திகளையும் மிகச் சுருக்கமாகக் குறைந்த சொற்களில் கூறி வாசகர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

எட்டு, பத்துப் பக்கங்களில் மட்டுமே தமிழ் நாளிதழ்கள் செய்திகளை வெளியிடுவதால், முக்கியமான செய்திகள் அனைத்தையும் வெளியிட வேண்டியது இன்றியமையாததாகும்.

செய்திகளை வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையிலும், விறுவிறுப்பாக இருக்கும்படியும் வெளியிட வேண்டும்.

### 2.2.2 சிதைத்தல் கூடாது

ஒரு செய்தியைத் தொடர்ந்து ஆர்வமுடன் படிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை வாசகர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

செய்திகளைத் தவறாகவோ, செய்தியின் நோக்கத்தைச் சிதைப்பதாகவோ ஒரு செய்தியை வெளியிட்டுவிடக் கூடாது. முக்கியமான செய்திகளை முக்கியப் பக்கங்களில் வெளியிட முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

செய்திகளில் சொற்களை எளிமையாகத் தரவேண்டும். செய்தித் தொடர்கள் ஒன்றுக்கொன்று கோர்வையாக இருக்க வேண்டும். செய்திகளுக்குத் துணைத் தலைப்புக்கள் கொடுத்து எளிதில் செய்தியை வாசகர் உள்வாங்கும்படி வெளியிட வேண்டும்.

### 2.2.3 சிக்கலைத் தவிர்த்தல்

சில நேரங்களில் செய்தியை வெளியிட்டவரின் பெயரை வெளியிடுவதால் சிக்கல் ஏற்படக்கூடும். அப்போது செம்மையாக்கம் செய்பவர் அவரது பெயரைக் குறிப்பிடாமல், 'அரசு வட்டாரங்கள் கூறுகின்றன', 'நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன' என்று பொதுவாகக் குறிப்பிட்டு, செய்தியை வெளியிடுவதே சிறந்தது.

செய்தியின் மொழிநடை எளிமையாகவும் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் இருக்க வேண்டும். எழுத்துப் பிழைகள் நேரா வண்ணம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கலைச்சொற்கள் சிக்கலானவையாக இருந்தால் அவற்றைப் புரிந்துகொள்ளும் வகையில் எளிமைப்படுத்தித் தர வேண்டும்.

### 2.2.4 மதிப்பை உயர்த்தல்

எந்தச் செய்திக்கு எந்த அளவு (Points-Font size) எழுத்துத் தேவை, எப்படிப் பத்திகளாகப் பிரித்து எழுதலாம் என்பதிலும் கவனம் தேவை.

தேவையற்ற செய்திகளையும் தொடர்களையும் நீக்குதல், சுருங்கக் கூறி விளங்க வைத்தல், செய்தித் தலைப்பை ஈர்ப்புடையதாக அமைத்தல் முதலியன செய்திக்குச் சிறப்புத் தருபவை. இருபொருள்படும் நிலையிலோ மாறுபட்ட பொருள்தரும் வகையிலோ செய்திகளை வெளியிடக் கூடாது. குழப்பமில்லாத தெளிவான மொழிநடையால் செய்தி அமைய வேண்டும். இவற்றால் செய்தியின் மதிப்புக் கூடும்.

செய்தியை ஆற்றல்மிக்க நடையில் கூறும்போது வாசகர் மனத்தில் அது கல்வெட்டாய்ப் பதிகிறது. சொல்லாட்சித்திறம் மிக்கவர்கள் சுவையாக, புதுமையாக, விறுவிறுப்பாகச் செய்திகளைத் தருகின்றனர். இதனால் பத்திரிகையின் மதிப்பு உயர்கின்றது.

செய்திகள் சரியானவையா, உண்மையானவையா என்பதைக் கூர்மையாகக் கவனித்து வெளியிட வேண்டும். தவறான செய்தியை வெளியிட்டுவிட்டால் ஒரு பத்திரிகை கட்டிக்காத்து வந்த உயர்ந்த மதிப்பை இழக்க நேரிடும்.

### 2.2.5 ஐயத்திற்குரியவற்றை அகற்றல்

ஒரு செய்தி உண்மையா பொய்யா என்ற சந்தேகம் வந்தால் அந்தச் செய்தியை ஒதுக்கிவிடுவதே நல்லது. 'சந்தேகம் வந்துவிட்டால் அதைப் போடாதே!' ("When in doubt, Cut it out!") என்பது இதழியல் பொன்மொழி. தினத்தந்தி நாளிதழ் நிறுவனரான சி.பா. ஆதித்தனார், "ஒரு செய்தியை வெளியிடலாமா வேண்டாமா என்று சந்தேகம் ஏற்பட்டால் அதை வெளியிடக் கூடாது; சந்தேகத்தை நீக்கிய பின்னரே வெளியிட வேண்டும். தவறான செய்தியை வெளியிட்டுக் கெட்ட பெயரெடுப்பதற்கு, அதை வெளியிடாமலிருப்பதே நல்லது" என்று தனது பத்திரிகை ஊழியர்களுக்குக் கூறியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

### 2.2.6 இட ஒதுக்கீடு செய்தல்

ஒரு செய்தியின் முக்கியத்துவத்திற்கு ஏற்பப் பத்திரிகையில் முக்கியப் பக்கத்தில் செய்தி இடம்பெறவேண்டும்.

பெரிய எழுத்துக்களில் முக்கியச் செய்தி அமைவதோடு, அதற்கு ஆதரவாகப்

புகைப்படங்கள் செய்தியின் அருகில் இடம்பெறுவதும் செய்திக்குரிய முக்கியத்துவத்தைக் காட்டும். நாளிதழாயின் அன்றைய செய்திகளில் முக்கியமானதைச் சுவரொட்டியிலும், வார இதழாயின் அட்டையிலும் அதுபற்றிய தலைப்பினை அச்சிடுவது நல்லது.

### 2.2.7 மூல ஆதாரங்களை ஆராய்தல்

செய்தியின் அமைப்பு முறை வாசகர்களின் நினைவாற்றலுக்குத் துணைசெய்தல் வேண்டும். செய்தியைச் செம்மைப்படுத்துபவர் செய்தியின் மூல ஆதாரம் (Source) சரிதானா என்று கவனித்தல் நல்லது. செய்தியின் படத்தை எந்த இடத்தில் இடம்பெறச் செய்தால் வாசகருக்கு எளிதில் புரியும் என்பதையும் செம்மையாக்கம் செய்பவர் சுட்டிக்காட்ட வேண்டும்.

### தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 2.3 எழுத்துப் படிகளின் வகைகள்

பத்திரிகை அலுவலகத்திற்கு வருகின்ற எழுத்துப்படிகளைக் கீழ்க் காணுமாறு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை:

1) செய்தியாளர்கள் சேகரித்து அனுப்பும் செய்திகள்.

2)செய்தி நிறுவனங்கள் அனுப்பும் செய்திகள்

3) சிறப்புக் கூறுகள் (Features), கட்டுரைகள் (Articles)

என்பவையாகும். மேற்கண்ட மூன்றனுள் செய்தியாளர்களிடமிருந்து பெறும் செய்திகளைச் செப்பனிடுதல்தான் கடுமையான பணியாகும். செய்தியாளர்கள் அவர்களது நோக்கில் செய்திகளை அனுப்புவர். செய்தித்தாளின் வெளியீட்டு நோக்கில் செய்திகளைக் குறைத்து, நீக்கி, விளக்கி, மாற்றி வெளியிட வேண்டும்.

செய்தி நிறுவனங்கள் அனுப்பும் செய்திகள் ஓரளவு செய்தியின் வடிவத்தில் இருக்கும். அச்செய்தியின் முன்வரலாறு, செய்தி இதழுக்குத் தெரியுமாதலால் அது பற்றிய விவரம் இடம்பெறாது. அதனை ஒவ்வோர் இதழும் தங்கள் பாணியில் சேர்த்துக்கொள்வது வழக்கம். மேலும், செய்தி நிறுவனம் தரும் செய்திகள் ஆங்கில மொழியிலேயே இருக்கும். வட்டார மொழி இதழ்கள் அவற்றைத் தங்கள் மொழியில் மொழிபெயர்த்துத் தங்களுக்கே உரிய மொழிநடையில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

சிறப்புக்கூறுகள், கட்டுரைகள் போன்றவற்றைத் துணையாசிரியர் அல்லது சுதந்திர எழுத்தாளர் (Free-lance Writers) எழுதுவர். இவற்றுள் சட்டச் சிக்கல் போன்ற குறைகள் நேர்வதற்கு வாய்ப்பில்லை.

## 2.4 அச்சுக் கோத்தல்

ஒரு துணையாசிரியர் செப்பனிட்ட செய்தியை அச்சுக் கோக்கும் பகுதிக்கு அனுப்பும்முன் சில கேள்விகளைக் கேட்க வேண்டும் என இதழாளர் ரெங்கசாமி பார்த்தசாரதி கூறுகின்றார். அவை பின்வருமாறு:

1) செய்தியில் கொடுத்திருக்கும் விவரங்கள் சரியானவையா என்று கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

2) செய்திகளில் ஆதாரமற்ற, தொடர்பற்ற முடிவுகள் உள்ளனவா, செய்திகளைப் படிப்பதில் வாசகர்களுக்கு இடையூறு உள்ளதா என்று பார்க்க வேண்டும்.

3) ஒவ்வொரு செய்திக்கும் போதுமான விளக்கம் உள்ளதா, சாதாரண வாசகனும் புரிந்துகொள்ளும் வகையில் செய்தி உள்ளதா என்று கவனிக்க வேண்டும்.

4) செய்திகள் கோவையாக உள்ளனவா என்று கேட்டுப் பார்த்துச் சரிசெய்து கொள்ள வேண்டும்.

5) தேவையில்லாமல் வாசகரைச் சிரமப்படுத்தக் கூடிய வகையில் செய்திகளின் மொழிநடை உள்ளதா? புரியாத, குழப்பமான சொற்கள் உள்ளனவா என்று கவனிக்க வேண்டும்.

6) உரிய காலத்தில் செய்தித்தாளை வெளியிடல் வாசகர் மத்தியில் பத்திரிகைக்கு நல்ல பெயரை ஏற்படுத்தும். உரிய காலத்திற்குள் இந்தச் செய்தியை அச்சுக்கோத்து முடித்துவிட முடியுமா என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 2.5 செம்மையாக்கக் குறியீடுகள்

செய்திகளில் இடம்பெறும் சொற்களோடு பொருத்தமுறப் பயன்படுத்தப்படும் குறியீடுகளும் செய்தியின் உணர்ச்சியை வாசகர் சரியாக உணரத் துணைசெய்கின்றன. செம்மையாக்கக் குறியீடுகளை எங்கெங்குப் பயன்படுத்துவது என்னும் விவரங்களும் முழுமையாகத் தெரிந்திருந்தால் அது செய்தியின் மதிப்பை உயர்த்தும்.

தமிழ் நாளிதழ்களில் பொதுவாகக் கீழ்க்காணும் செம்மையாக்கக் குறியீடுகளே பயன்படுத்தப்படுகின்றன. அவை:

1 கேள்விக்குறி ?

2 ஆச்சரியக்குறி !

3 கால்புள்ளி ,

4 அரைப்புள்ளி ;

5 முக்கால்புள்ளி (கோலன்) :

6 முற்றுப்புள்ளி .

7 ஒற்றை மேற்கோள் ‘ ’

8 இரட்டை மேற்கோள் “ ”

9 சிறுகோடு -

## 2.6 தொகுப்புரை

இதுவரை ஒரு பத்திரிகையில் செய்தி வெளியிடுவதற்கு முன்பு துணை ஆசிரியர் செய்ய வேண்டிய செம்மையாக்கப் பணிகளைக் கண்டோம். இவ்வளவு பொறுப்புகள் மிகுந்த துணையாசிரியர் ஒரு பத்திரிகையின் முதுகெலும்பாவார். இத்துணைப் பணிகளைச் செய்தாலும் வெளி உலகிற்கு அறிமுகமாகாமல் பணியாற்றிக் கொண்டிருப்பவர் பத்திரிகையின் துணையாசிரியரே என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

செம்மையாக்கம் செய்பவர் கவனத்தில் கொள்ள வேண்டியவை: செம்மையாக்க வகைகள், அச்சுக்குப் போகும் முன்பு மிகவும் கவனமாகப் பரிசோதிக்க வேண்டியவை எல்லாம் ஒரு பத்திரிகையின் பெருமையை வெளி உலகிற்குத் தெரிவித்து, விற்பனையைக் கூட்டும்; தரத்தையும் உயர்த்திப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு வலிமையூட்டும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 3

## P20443 மொழிநடையும் திருத்தமும்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இதழியலுக்கென்று பயன்படுத்தப்பட வேண்டிய மொழிநடை சிறப்பாக அமைய என்ன செய்யவேண்டும் என்பதும், மொழிநடை நூல்கள் என்ன கூறுகின்றன என்பதும் இப்பாடத்தில் விளக்கப்படுகின்றன.

பிழையற்ற, தெளிவான, சுருக்கமான, வாசகர் விரும்பும்படியான மொழிநடை எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் விளக்குகிறது.

இதழ்களில் சில மொழிநடை அமைப்புகளை எவ்வாறு வெளியிடக் கூடாது என்பதையும், அதற்கான திருத்தங்களையும் இப்பாடம் குறிப்பிடுகிறது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இதனைப் படித்து முடிக்கும்போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறலாம்.

- இலக்கியக் கட்டுரைகளின் மொழிநடைக்கும் இதழ்களின் மொழிநடைக்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்துகொள்ளலாம்.

- முற்கால இதழ்களின் மொழிநடை அமைப்பு எவ்வாறு இருந்தது என்பதை அறியலாம்.

- இதழ்களின் மொழிநடை வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் திரு.வி.க எவ்வாறு உதவினார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

- ஒவ்வொரு பத்திரிகையின் மொழிநடை அமைப்பும் வெவ்வேறாக இருந்தாலும் வாசகர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே முக்கிய நோக்கம் என்பதை உணரலாம்.

- இதழியல் மொழிநடை அமைப்பில் எவ்வாறு திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும்; பண்டிதர்களின் சொற்களை வாசகர்கள் புரிந்து கொள்ளுமாறு புதிய எளிய சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது போன்ற செய்திகளை அறியலாம்.

- வெளிமாநில, வெளிநாட்டு இடப்பெயர்களையும் இயற்பெயர்களையும் இதழ்களில் எவ்வாறு வெளியிடவேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

3.0 பாட முன்னுரை
3.1 இதழியல் மொழிநடை
3.2 மொழிநடை அமைப்பு
தன் மதிப்பீடு : வினாக்கள் – I
3.3 திருத்தமும் தவிர்த்தலும்
3.4 திருத்தமும் சேர்த்தலும்
3.5 பிறகூறுகள்
3.6 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 3.0 பாட முன்னுரை

ஓர் இதழுக்குப் பெருமை சேர்ப்பது அதன் மொழிநடையாகும். கடினமான மொழிநடை அமைப்புள்ள இதழ்களை வாசகர்கள் புறக்கணிப்பர். ஒருவரோடு பேசும்போது ஒரு மொழிநடையைக் கையாளுகிறோம். ஆசிரியர் வகுப்பறையில் ஒரு மொழிநடையைக் கையாளுகிறார். மேடைப் பேச்சில் ஒரு பேச்சாளர் ஒருவகை மொழிநடையைக் கையாளுகிறார். ஒவ்வோர் இதழும் தனக்கென்று ஒரு மொழிநடையைக் கையாளுகின்றது. மொழிநடை சிறப்பாக அமையச் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியம் ஆகும்.

## 3.1 இதழியல் மொழிநடை

இதழியல் மொழிநடை பிற மொழிநடை வகையிலிருந்து மாறுபட்டது. குறைந்த கல்வியறிவு உடையவர்களும் எளிதில் படித்துப் புரிந்துகொள்ளும் மொழிநடையில் இதழ்களின் மொழிநடை அமைய வேண்டும். அகராதிகளின் துணை கொண்டு படிக்கும்படியான இதழ்களை வாசகர்கள் புறக்கணிப்பர். மொழிநடை பற்றி சி.பா.ஆதித்தனார், "பேச்சு வழக்கில் இருக்கும் தமிழே உயிருள்ள தமிழ். அதைக் கொச்சை நீக்கி எழுத வேண்டும். புரிகிற தமிழில் எழுதினால் மட்டும் போதாது. பேசுகிற தமிழில் எழுத வேண்டும்" என்கிறார்.

### 3.1.1 முற்காலத் தமிழ் இதழ்களின் மொழிநடை

முற்காலங்களில் இதழ்களைத் தொடங்கியவர்கள் அரசியல் விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் எண்ணத்துடன்தான் தொடங்கினர். அவர்கள் மொழிப்புலமை பெற்றிருக்கவில்லை. ஆங்கிலமும் வடமொழியும் கலந்த நடையே தமிழ் இதழியல் மொழிநடையாக இருந்தது. பிழைகளும் அதிகமாக இருந்தன. தமிழ் இதழ்களில் காணப்பெறும் பிழைகளைக் கண்டு மனம்நொந்த திரு.வி.கலியாண சுந்தரனார்,

> தமிழரைப்போல் மொழிக் கொலையில்
> தலைசிறந்தோர் எவருளரோ

என்று பாடியுள்ளார். இவ்வாறு பாடியதுடன் மட்டுமன்றி உணர்ச்சி, விறுவிறுப்பு, வேகம் மிக்க ஒரு புதிய தமிழ்நடையை இதழியலில் உருவாக்கி மக்களிடம் எழுச்சியூட்டினார். கருத்துகளைத் தொகுத்து, மக்களை ஈர்க்கும் தலைப்புகளை இட்டு எழுதினார். செய்திகளை வகை செய்து, உட்பிரிவுகள் தந்து அவற்றை விளக்கி, சிறுசிறு தொடர்களில் எழுதினார். நவசக்தி, தேசபக்தன் ஆகிய அவரது பத்திரிகைகள் மூலம் மக்களுக்கு எழுச்சியூட்டும் கருத்துகளை வழங்கினார். பாரதியார், கல்கி, சங்கு கணேசன், டி.எஸ்.சொக்கலிங்கம் போன்றோர் தொடர்ந்து முயன்று பத்திரிகைத் தமிழில் மாற்றம் கொண்டு வந்து வளம் சேர்த்தனர். தனித் தமிழ் இதழ்கள், திராவிட இயக்க இதழ்கள் ஆகியவை தமிழ் மொழியையும் தமிழ் உணர்வையும் வளர்த்தன. அறிஞர் அண்ணா, மு.கருணாநிதி போன்றோரின் எழுத்துக்கள் தமிழ்ப் பத்திரிகைகளின் மொழி வளத்தை வளர்த்தன.

# 3.2 மொழிநடை அமைப்பு

ஒவ்வொரு பத்திரிகையின் மொழிநடை அமைப்பும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் என்பதில்லை. செய்திகளை வாசகர்களுக்கு அறிவிக்கிற பணியே இதழ்களுக்கு முக்கியமான பணியாகும். அதனால், அவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இதழ்களின் மொழிநடை அமைப்பு இருக்க வேண்டும். எளிமை, இனிமை, சுருக்கம், செறிவு உள்ளதாக நடை இருக்க வேண்டும். செய்தி, கட்டுரை, தலையங்கம் ஆகியவற்றைப் படிப்பவர் இதை இவர்தாம் எழுதியிருப்பார் என்று மொழிநடையைக் கொண்டு தீர்மானிக்க முடிந்தால், அதை எழுதியவர் வெற்றியடைந்து விட்டார் எனலாம்.

## 3.2.1 பிழையில்லாத மொழிநடை அமைப்பு

இதழ்களின் மொழிநடை எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் இல்லாததாக இருக்க வேண்டும். தொடர் அமைப்புச் சரியானதாக இருப்பது அவசியம், தவறான தொடர் அமைப்புகள் தவறான பொருளைத் தந்துவிடும். எனவே, நடை அமைப்புத் தெளிவாக இருத்தல் அவசியம். சொல்லுகின்ற கருத்துகளைச் சுற்றி வளைத்துக் கூறாமல் நேரடியாகச் சொன்னால் வாசகர்கள் செய்தியின் உட்பொருளை முழுமையாகப் புரிந்துகொள்வர்.

கருத்துகளைச் சிறுசிறு தொடர்களாகச் சொல்லுதல் சிறந்தது. நீண்ட தொடர்களாக எழுதும் பொழுது இலக்கணப் பிழைகள் ஏற்படலாம். வாசகருக்குச் செய்தியை உள்வாங்குதலில் சிரமம் நேரலாம். இன்றைய அவசர உலகில் இயந்திரமாக இயங்கிக் கொண்டிருக்கும் வாசகர் செய்திகளை விரைவாகப் படிக்க வேண்டிய நிலை உள்ளது. நீண்ட தொடரமைப்பு வாசகருக்குப் படிக்கத் தடையாக இருக்கும். புதிய சொற்களைப் பயன்படுத்தும் பொழுது அவற்றிற்குச் சரியான விளக்கம் தரவேண்டும். மொழித் தெளிவிற்காகக் கால் புள்ளி, அரைப் புள்ளி போன்ற நிறுத்தற் குறிகளைச் சரியான இடத்தில் கொடுக்க வேண்டும். இருபொருள்படும் சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. வேற்றுமை உருபுகளைத் தக்க இடங்களில் பயன்படுத்த வேண்டும்.

## 3.2.2 துறை சார்ந்த மொழிநடை அமைப்பு

முன்பெல்லாம் இதழியலாளர் எல்லாத் துறைகளைப் பற்றிய செய்திகளையும் எழுத வேண்டும். ஆனால், இப்போது நிலைமை அப்படி இல்லை. ஒவ்வொரு துறை பற்றிய (வாணிகம், பொருளாதாரம், அரசியல், விளையாட்டு, திரைப்படம், நாட்டு நடப்பு போன்ற) செய்திகளை எழுதுவதற்கும் தனித்தனியாக இதழாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதனால், ஒரு குறிப்பிட்ட துறை சார்ந்த செய்தியை அத்துறையில் நன்கு தேர்ச்சிபெற்ற துணையாசிரியர் எழுதுவதால், தமக்கென்று ஒரு தனித்த எழுத்துப் பாணியையும் வளர்த்துக் கொள்கின்றனர். இந்த வளர்ச்சி பெறுவதற்குத் துறையில் தேர்ந்த அறிவினைப் பெறுவதோடு, வைரத்தைப் பட்டை தீட்டுவது போல் மொழிநடையைச் சிறப்பாக அமைக்கப் பயிற்சி பெற வேண்டும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 3.3 திருத்தமும் தவிர்த்தலும்

பல்வேறு வகையான செய்திகளை இதழ்களில் வெளியிடுகின்ற பொழுது சில முறைகளைப் பின்பற்ற வேண்டும். அம்முறைகளைப் பின்பற்றாமல் செய்திகளை வெளியிடுவது வாசகர்கள் செய்திகளைப் படித்துப் புரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படுத்தும். சில செய்திகளைச் சில முறைகளில் வெளியிடுவதைவிட, திருத்தி வேறு முறைகளில் வெளியிட்டால் செய்தியை வாசகர் எளிமையாகப் படித்துப் புரிந்து கொள்வர். இப்பகுதி, செய்திகளை எவ்வாறு வெளியிடக் கூடாது என்பதையும் அவற்றிற்கான திருத்தங்களையும் சுட்டிக் காட்டுகின்றது.

### 3.3.1 செயப்பாட்டு வினையைத் தவிர்த்தல்

செய்திகளின் நடையில் உயிரோட்டத்தைக் குறைக்கக் கூடிய மொழிக் கூறுகளைப் பயன்படுத்தக் கூடாது. மொழியின் படிக்கும் வேகத்தைக் கூட்டக் கூடிய மொழிக் கூறுகளையே பயன்படுத்த வேண்டும்.

செயப்பாட்டு வினை, செய்திக்குக் காரணமானவர்களைச் செய்தியிடமிருந்து அந்நியப்படுத்தும் இயல்புடையது. இதன் விளைவாக வாசகர் செய்தியிலிருந்து அந்நியப்படுவார். எனவே செயப்பாட்டு வினையைக் கூடுமானவரை தவிர்ப்பது நல்லது.

**“நகரின் பல பகுதிகளில் கடைகள் தாக்கப்பட்டன. பேருந்து ஒன்றும் தீக்கிரையாக்கப்பட்டது”**

இந்தச் செய்தியில் ‘தாக்கப்பட்டன’, ‘தீக்கிரையாக்கப்பட்டது’ என்பன செயப்பாட்டு வினைகள் ஆகும். இப்படி எழுதுவதைத் தவிர்க்க வேண்டும். இச்செய்தியைப் பின்வருமாறு திருத்தி அமைக்கலாம்.

**“போராட்டக்காரர்கள் நகரின் பல கடைகளைத் தாக்கினார்கள். பேருந்து ஒன்றையும் தீயிட்டுக் கொளுத்தினர். பேருந்து முழுதும் எரிந்து சேதமானது.”**

என்று எழுதுவதே சிறந்தது.

### 3.3.2 எதிர்மறையைத் தவிர்த்தல்

செய்திகளை நேரடியாக உடன்பாட்டு நிலையிலேயே தர வேண்டும். எதிர்மறையில் எழுதுவதை முடிந்தவரைத் தவிர்ப்பது நல்லது. ஒரே வாக்கியத்தில் இரண்டு எதிர்மறை வந்தால் பொருள் புரிதலில் இன்னும் குழப்பமாகும். உதாரணத்திற்கு ஒரு செய்தி.

**“கல்வித் திட்ட தீர்மானத்தை எதிர்த்து 115 வாக்குகளும், ஆதரித்து 75 வாக்குகளும் கிடைத்தன”**

இந்தச் செய்தியில் திட்ட எதிர்ப்பு, எதிர்த்து என்று இரண்டு எதிர்மறைச் சொற்கள் வந்துள்ளன. இதனால் பொருள் குழப்பமே உருவாகும். இதனைப் பின்வருமாறு திருத்தி அமைக்கலாம்.

**“கல்வித் திட்டத் தீர்மானத்திற்கு ஆதரவாக 115 வாக்குகளும், எதிர்த்து 75**

வாக்குகளும் கிடைத்தன”

என்று வெளியிடுவது பொருள் தெளிவுக்கு வகைசெய்யும்.

### 3.3.3 பழஞ்சொற்களைத் தவிர்த்தல்

செய்திகளில் மீண்டும் மீண்டும் பயன்படுத்திப் பொருளற்றுப் போய்விட்ட பழஞ்சொற்களையும் தொடர்களையும் அடிக்கடி ஆள்வதைத் தவிர்க்க வேண்டும்.

தாய்க்குலத்திற்கு அறைகூவல்
பரிதாபச் சாவு
நெஞ்சைப் பிளக்கும் நிகழ்ச்சி
தீவிரப் புலன்விசாரணை
கண்ணீர்க் கதை

போன்ற தொடர்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் அவற்றின் உண்மையான பொருளை அவை இழந்துவிடுகின்றன. வாசகருக்கு ஒருவித எரிச்சலோ அல்லது நையாண்டி உணர்வோ எழ இது காரணமாகி, செய்தியை உள்வாங்கத் தடையாகிவிடும். இத்தொடர்களைத் திருத்திப் புதிய முறையில் சொற்களை அறிமுகப்படுத்திப் பின்வருமாறு அமைக்கலாம்.

பெண்களுக்கு எச்சரிக்கை!
எதிர்பாராத சாவு!
மனத்தை உருக்கும் நிகழ்ச்சி
வேகமான விசாரணை
சோகக் கதை

### 3.3.4 கூறியது கூறலைத் தவிர்த்தல்

இதழ்களின் தலைப்பிலும் முகப்பிலும் உடலிலும் ஒரே தகவலைக் கூற வேண்டிய நிலை உள்ளது. இதனால் வாசகர்களுக்கும் சலிப்பு ஏற்படாத வண்ணம், வெவ்வேறு சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்த வேண்டும்.

விகடன் ஆசிரியர் விடுதலையானார்

என்ற தலைப்பிட்டுவிட்டு, செய்தி முகப்பிலும் செய்தி உடலிலும் இப்படியே ‘விகடன் ஆசிரியர் விடுதலையானார்’ என்றே வெளியிட்டால் வாசகருக்குச் சலிப்பு ஏற்படும். இதனால்,

விகடன் ஆசிரியர் விடுதலை

என்ற தலைப்பிலும்,

‘விடுதலை ஆனார்’

என்று செய்தி முகப்பிலும்,

‘விடுதலை செய்யப்பட்டார்’

என்று செய்தி உடலிலும் எழுதலாம்.

## 3.4 திருத்தமும் சேர்த்தலும்

வாசகர்களை மையமாகக் கொண்டு சொல்லப்படும் செய்திகளின் தன்மைக்கேற்ப முக்கியத்துவம் கொடுத்துத் தலைப்புகளைத் திருத்தி அமைக்க வேண்டும். செய்திகள் உயிரோட்டமாக அமைய வேண்டுமெனில் அதற்கேற்ப திருத்தம் செய்ய வேண்டும்.

### 3.4.1 செய்தித்தன்மை அடிப்படையில் திருத்தம்

எந்தச் செய்தியைச் சொல்ல வேண்டுமோ அதைச் சுற்றி வளைக்காமல் நேரடியாகச் சொல்ல வேண்டும். கீழ்க்காணும் செய்தியைக் காண்க.

**தனியார்க் கல்லூரி நிருவாகம் கோரிக்கை**

கோயம்புத்தூர், சிறுபான்மையரல்லாத கல்லூரி நிருவாகங்கள் சங்கம் 1976ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார்க் கல்லூரிகள் சட்டத்திற்குப் பல்வேறு திருத்தங்களைப் பரிந்துரைத்துள்ளது. இதில் முதல்வர்களே, பேராசிரியர்களை நியமிக்கும் உரிமை வழங்க வகை செய்து சட்டத் திருத்தம் கொண்டுவர ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

இச்செய்தியில் முதல்வர்களே, பேராசிரியர்களை நேரடியாக நியமிக்கக் கோரியிருப்பதே முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகும். தற்போது வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாகவே கல்லூரி ஆசிரியர்களை நியமிக்க முடியும். அதனை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை இங்கு முன்வைக்கப்படுகின்றது. எனவே தலைப்பிலும் செய்தி முன்னுரையிலும் இந்த முக்கியக் கோரிக்கைக்குச் சிறப்பிடம் தந்து எழுதலாம். கோரிக்கை என்று பொதுவாகக் குறிப்பிடுவதைவிட என்ன கோரிக்கை என்பதைச் சரியாகச் சுட்டிக்காட்டுவது வாசகருக்கு நேரடியாகச் செய்தியைச் சொல்வதாகும். இதனைப் பின்வருமாறு திருத்தி அமைக்கலாம்

**“முதல்வர்களே பேராசிரியர்களை நியமிக்க உரிமை வேண்டும்!”**

**தனியார்க் கல்லூரிகள் கோரிக்கை!**

என்று தலைப்பிடுவதால் அந்தச் செய்தியின் மையக் கருத்து பளிச்சென்று வெளிப்படுவதுடன், செய்தியும் படிக்கக் கூடியதாக (Readable) அமைகிறது.

### 3.4.2 உயிரோட்டம் தரும் வகையில் திருத்தம்

வெளியிடப்படும் செய்தியில் உயிரோட்டம் இருக்க வேண்டுமாயின் பேச்சு மொழியை மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும். அதுவே வழக்கில் உள்ள மொழி, வாழ்வோடு இயைந்த மொழியாகும். சான்றாக,

> **“கைத்தறித்துறை அமைச்சர் நாளையும் நாளை**
> **மறுநாளும் மதுரை மாவட்டத்தில் சுற்றுப்**
> **பயணம் செய்கிறார்”**

என்பதில் எதிர்கால நிகழ்ச்சிக்கு நிகழ்கால விகுதி (-கிறார்) பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பேச்சு மொழி அமைப்பில் உள்ள அமைப்பாகும். இதுபோன்று பஸ், ரயில், ரோடு போன்ற வழக்கிலுள்ள பிற மொழிச் சொற்களும் ஏராளமாகச் செய்தித்தாள்களில்

பயன்படுத்தப்படுகின்றன. அதுபோல இக்கட்டு, நௌிவு சுழிவு, தாராளமாக, திடீரென போன்ற பேச்சு மொழிச் சொற்களும் பத்திரிகைகளுக்கு உகந்தவையாகும். நீளமான சொற்கள், நீளமான தொடர்களைத் தவிர்த்துச் சிறிய சொற்களையும் சிறிய தொடர்களையும் பயன்படுத்த வேண்டியது அடுத்த தேவையாகும்.

| நீண்ட சொற்கள் | | சுருக்கமான சொற்கள் |
|---|---|---|
| ஏராளமானதாக | - | ஏராளமாக |
| தொழிலாளர்களிடையே | - | தொழிலாளரிடையே |

## 3.5 பிற கூறுகள்

செய்திகளைப் படிக்கும் வாசகர்களை மனத்திற் கொண்டு, அவர்களுக்குச் சிரமம் ஏற்படாத வகையில் நிறுத்தம் (Text Breakers) இடம் பெறச் செய்ய வேண்டும். செய்தியின் முக்கியத்துவத்தையும், செய்தியின் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு இலக்கண மரபு மீறல் ஏற்பட்டாலும் அதை மேற்கொள்ளலாம்.

### 3.5.1 செய்தி நிறுத்தம்

செய்தித்தாள்களில் செய்திகள் மிகச் சிறிய எழுத்துக்களில் வெளியிடப்படுகின்றன. இவற்றை வாசகர்கள் படிக்க வேண்டுமாயின் செய்தி நிறுத்தம் (Text Breakers) பயன்படுத்த வேண்டும்.

ஒரு பக்கத்தைத் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கும் போது பெரிய எழுத்துக்கள், இடைவெளிகள் ஆகியவை குறுக்கிட்டால் கண்கள் அந்த இடத்தில் தங்கிச் சிறிது ஓய்வெடுக்கின்றன. இவ்வாறு படிக்கும்போது நிறுத்தம் ஏற்படுத்தும் அமைப்புகளைச் செய்தி நிறுத்தம் என்பர். அந்த வகையில் செய்தித்தாளில் ‘காலம்’ (Column) பிரித்தல், பத்தி (Paragraph) பிரித்தல், துணைத் தலைப்பு இடுதல் (Sub headings) ஆகியவை செய்தி நிறுத்தங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பொதுவாகக் கட்டுரை மற்றும் பிற வகையான உரைநடையில் பத்திகளும் காலமும் துணைத்தலைப்புகளும் கருத்து அடிப்படையிலேயே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், செய்தித்தாளில் படிக்கும் தன்மை (Readability) அடிப்படையிலேயே அவை கையாளப்படுகின்றன.

துணைத் தலைப்புக்களை 10 அல்லது 12 செ.மீ.க்கு ஒருமுறை பயன்படுத்தலாம். மூன்று பத்திகளுக்கு ஒருமுறை துணைத் தலைப்பு கண்டிப்பாக இருக்க வேண்டும். துணைத் தலைப்பால் மற்றொரு பயனும் உண்டு. எழுதிக்கொண்டிருக்கிற செய்திக் கூறு மாறும்போது துணைத் தலைப்பிட்டு அந்த மாற்றத்தைக் காட்ட முடியும். பத்திகள் 2 அல்லது 3 செ.மீ. நீளம் இருந்தால் போதும்.

### 3.5.2 இதழ்களும் இலக்கணமும்

தகவல் தொடர்புக் கருவிகளின் சாதனையால் உலகமே ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டது. உலகளாவிய கருத்துப் பரிமாற்றம் (Global Communication) என்பது இன்று சாத்தியமாகிவிட்டது. உலகில் பல்வேறு மூலைகளில் நடக்கும் நிகழ்ச்சிகளையும் கண்டுபிடிப்புகளையும் சிந்தனைகளையும் ஒரு நாட்டிலுள்ள குறிப்பிட்ட ஒரு மொழியில் எடுத்துக்கூற முற்படுகின்றனர். அப்போது அந்த மொழியின் ஒரு சில இலக்கண வரம்புகளை மீறுவது தவிர்க்க முடியாததாகிறது.

வெளி மாநில, வெளிநாட்டு இடப்பெயர்களையும் இயற்பெயர்களையும் எழுதும் பொழுது இலக்கண விதிகளை மீற வேண்டியதாய் இருக்கும். வாஷிங்டன், அலாஸ்கா, ரீகன், ராஜிவ், டார்ஜிலிங் போன்ற சொற்களில் உள்ள ஒலிகளும் ஒலிக்கூட்டங்களும் தமிழில் பயன்படுத்தப்படுவதில்லை. ரீ, ரா, டா ஆகிய எழுத்துக்கள் தமிழ் மொழியில் முதல் எழுத்தாக வருவதில்லை. இவற்றைத் தமிழில் இலக்கண விதிகளுக்கு இணங்க எழுத வேண்டுமாயின் வாசிங்குடன், அலாசுகா, இரீகன், இராசீவு, தார்சிலிங்கு என்று

எழுத வேண்டியிருக்கும். இவ்வாறு பத்திரிகைச் செய்திகளில் இடம்பெற்றால் அவை கேலிக்குரியனவாய் ஆகிவிடும்.

## 3.6 தொகுப்புரை

இலக்கியங்களில் கையாளப்படுகின்ற மொழிநடைக்கும் இதழ்களில் கையாளப்படுகின்ற மொழிநடைக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. இதழ்களின் மொழிநடை குறைந்த அளவு கல்வியறிவுடையவர்களுக்கும் புரியும்படியாக இருத்தல் வேண்டும். முற்காலத்தில் தமிழுடன் வடமொழி கலந்த மொழிநடையை இதழ்களில் கையாண்டனர். மொழிநடை அமைப்பில் எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்ப் பிழை மற்றும் பிற இலக்கணப் பிழைகள் இருக்கக் கூடாது.

பத்திரிகைகளில் செய்திகளை வெளியிடும் பொழுது தேவையான இடங்களில் தேவையான திருத்தங்களைக் கொண்டு வெளியிட வேண்டும். இப்படிப்பட்ட திருத்தங்கள் வாசகர்கள் செய்திகளை எளிமையாகப் புரிந்துகொள்ள உதவும். தொடர்ந்து வாசகர்கள் அந்தப் பத்திரிகையை வாங்குவதற்கும் இது வழிவகுக்கும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## பாடம் - 4

# P20444 இதழ்களின் வகைமையும் குறியீடுகளின் பயன்பாடும்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இக்கால இதழ்களின் வளர்ச்சி, வகைகள், நிலைப்பாடு, வாசகர்களின் விருப்பம் பற்றிய செய்திகள் இப்பாடத்தில் விளக்கப்படுகின்றன. இதழ்களில் காணப்படுகின்ற பிழைகள், பயன்படுத்துகின்ற செம்மையாக்கக் குறியீடுகளின் பயன்பாடுகள் ஆகியன பற்றியும் இப்பாடத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படித்து முடிக்கும்போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறலாம்.

- நம் நாடு விடுதலையாவதற்கு முன்னும் பின்னும் இதழ்களின் உள்ளடக்கம் எவ்வாறு இருந்தது என்பதை அறியலாம்.

- இதழ்களின் விற்பனையைப் பொறுத்தே பெரிய இதழ்கள், நடுத்தர இதழ்கள், சிறிய இதழ்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

- புலனாய்வு இதழ்களின் போக்குகள் பற்றி உணரலாம்.

- ஒற்றுப் பிழைகள் களையப்பட வேண்டியதன் இன்றியமையாமையைப் புரிந்துகொள்ளலாம்.

- கேள்விக்குறி, ஆச்சரியக்குறி, கால்புள்ளி, அரைப்புள்ளி போன்ற செம்மையாக்கக் குறியீடுகள் இதழ்களில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன, அவற்றின் பயன்பாடு என்ன என்பதைத் தெளியலாம்.

# பாட அமைப்பு

4.0 பாட முன்னுரை
4.1 தமிழ் இதழ்கள்
4.2 இன்றைய நிலை
தன் மதிப்பீடு : வினாக்கள்- I
4.3 செம்மையாக்கக் குறியீடுகளின் பயன்பாடு
4.4 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 4.0 பாட முன்னுரை

நம் நாடு விடுதலை பெற்ற பிறகு பல துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்து வருகிறது. அப்படிப்பட்ட ஒரு துறையாகச் செய்தித்தாள்கள், வார, மாத இதழ்கள் வெளியீட்டுத்துறை திகழ்கின்றது, உருவத்திலும் உள்ளடக்கத்திலும் இன்று இதழ்கள் முன்னேற்றம் அடைந்துள்ளன. நாடு விடுதலை பெற்ற பொழுது ஒரு சில இதழ்களே வெளிவந்தன. அவற்றுள் தினமணி, தினத்தந்தி, சுதேசமித்திரன், கல்கி, குமுதம், ஆனந்த விகடன், கலைமகள், கணையாழி, அமுதசுரபி போன்றவை மிகவும் குறிப்பிடத்தக்கவை. காலச்சுவடு, செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி போன்ற இலக்கிய இதழ்களும் ஒரு சில குறிப்பிட்ட வாசகர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கில் வெளியிடப்படுகின்றன.

புதுதில்லி, மகாராஷ்டிரம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் இதழ்களின் வெளியீட்டில் இந்திய அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.

## 4.1 தமிழ் இதழ்கள்

பொதுவாக இதழ்களை,

1) செய்தித்தாள்கள் (News Papers)

2) பருவ இதழ்கள் (Journals)

என்று இரண்டு வகைப்படுத்தலாம். செய்தித்தாள்கள் காலை அல்லது மாலையில் வெளியிடப்படுகின்றன. தற்போது புதுதில்லி, மும்பை, கொல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் முற்பகல் 11.00 மணிக்கும்கூட காலை இதழ் ஒன்றைச் சில நிறுவனங்கள் வெளியிடுகின்றன.

வார இதழ்கள், வாரம் இருமுறை இதழ்கள், பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வெளிவரும் இதழ்கள், மாத இதழ்கள், காலாண்டு இதழ்கள், அரையாண்டு இதழ்கள், வருட இதழ்கள் என்று பருவ இதழ்களைப் பிரிக்கலாம்.

### 4.1.1 எண்ணிக்கையும் இதழ்களும்

சில இதழ்களைக் கொள்கை அடிப்படையிலும், இலக்கியங்கள் அடிப்படையிலும் பிரிக்கலாம். ஓர் இதழின் விற்பனையாகும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் வகைப்படுத்தலாம். எண்ணிக்கை அடிப்படையில்

1) பெரிய இதழ்கள்

2) நடுத்தர இதழ்கள்

3) சிறிய இதழ்கள்

என்று வகைப்படுத்தலாம். குமுதம், ராணி, ஆனந்த விகடன், குங்குமம் முதலிய இதழ்கள் பல இலட்சம் படிகள் விற்பனையாகின்றன. அதனால் இவை பெரிய இதழ்கள் எனப்படுகின்றன. கலைமகள், கணையாழி, அமுதசுரபி போன்றவை நடுத்தர இதழ்களாகும். இவை ஒவ்வொன்றும் ஒரு இலட்சம் படிகளுக்குக் குறைவாகவே விற்பனையாகின்றன. அதற்கும் குறைவாகச் சில ஆயிரம் படிகளே விற்பனையாகும் செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, காலச்சுவடு, மதுரை மணி போன்றவை சிற்றிதழ்கள் எனப்படுகின்றன.

### 4.1.2 ஆசிரியர்களும் இதழ்களும்

இதழ் ஆசிரியர்களின் பெயர்களுக்காகவும் சில இதழ்களின் விற்பனை எண்ணிக்கை அதிகரிக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக, தியாகராஜ செட்டியார் (தமிழ்நாடு இதழ்), கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி (கல்கி), திரு.வி.க. (நவசக்தி, தேசபக்தன்) ஆகியோரைச் சொல்லலாம். மொழி நடைக்காகவும் முற்கால இதழ்கள் வாசகர்களால் வாங்கி வாசிக்கப்பட்டன.

இன்றைய நிலை முற்கால நிலையிலிருந்து மாறுபட்டதாக அமைந்துள்ளது. ஆசிரியர்களின் பெயர்களைப் பற்றியோ, ஒரு பத்திரிகையின் ஆசிரியர் யார் என்பது

பற்றியோ இன்றைய வாசகர்கள் கண்டுகொள்வதில்லை.

### 4.1.3 கொள்கையும் இதழ்களும்

பொதுவான இதழ்களைத் தவிர, தமது கட்சியின் செய்திகளையே தரும் கட்சி இதழ்கள், அரசின் கொள்கைகளை விளக்கும் அரசு இதழ்கள், நாட்டில் நடக்கும் ஆராய்ச்சிகளை வெளியிடும் ஆராய்ச்சி இதழ்கள், சாதி சமய இதழ்கள் போன்றவையும் இன்று வெளியிடப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் செய்திகளை வெளியிட்டுத் தங்களுக்கென்று ஒரு வாசகர் வட்டத்தை உருவாக்கிக் கொண்டுள்ளன.

## 4.2 இன்றைய இதழ்களின் நிலை

இன்றைய இதழ்களின் அமைப்பு முறை (Lay-out), பக்க அமைப்பு (Page Make-up), வண்ணமயமான அச்சுக்கள் மிகவும் சிறப்பாக உள்ளன. மேலை நாடுகளைப் போலவே நம் நாட்டிலும் நக்கீரன், நெற்றிக்கண், ஜூனியர் விகடன், குமுதம் ரிப்போர்ட்டர் போன்ற புலனாய்வு இதழ்கள் கொலை, கொள்ளை, ஊழல், சதித் திட்டம் முதலியவற்றின் உண்மைகளை வெளிக்கொண்டு வருகின்றன. அனைத்து இதழ்களுமே ஏதாவதொரு வகையில் சமூகத்திற்குச் சில செய்திகளையாவது கொடுத்து வருகின்றன. மேற்குறிப்பிட்ட வகையில் சில நிலையில் வளர்ச்சியடைந்தாலும், வணிக நோக்கத்தாலும், கவனக் குறைவாலும் சில குறைகள் காணப்படுகின்றன.

### 4.2.1 பாலுணர்வு

இக்காலத்தில் வெளிவருகின்ற இதழ்கள் எல்லாம் விற்பனையைப் பெருக்கி, வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்ற வணிக நோக்கில்தான் செயல்பட்டு வருகின்றன.

எனவே, சில இதழ்கள் பாலுணர்வைத் தூண்டக் கூடிய செய்திகள், கதைகள், படங்களை நேரடியாகவோ இலைமறைகாயாகவோ வெளியிட்டுச் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கின்றன. வார, மாத இதழ்களின் அட்டைகளில் நடிகைகளின் கவர்ச்சிப் படங்களைப் போட்டு இளைஞர்களின் உள்ளங்களைப் பாழ்படுத்துகின்றனர். எப்படியும் புகழ்பெற்றாக வேண்டும் என்ற உணர்வோடு நடிகைகள் பல்வேறு கோணங்களில் படங்களையும் பேட்டிகளையும் தருகின்றனர். குடும்ப இதழ் என்று தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளும் இதழ் கூட அட்டையில் ஆபாசப் படங்களையே வெளியிடுகின்றது.

ஒருசில இதழ்கள் வாசகர்களின் உள்ளங்களைப் பாழ்படுத்தும் கதைகளை வெளியிட்டுச் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கின்றன. அறிவியல் தொழில் நுட்பங்கள் கிடைத்தாலும்கூட அவற்றை முழுமையாகப் பயன்படுத்தச் சில இதழ்கள் தவறிவிட்டன. அதனாலும் ஓரளவு சமூக வளர்ச்சி பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதழ்கள் தங்களுக்குரிய சமூகக் கடமைகளையும், பொறுப்புகளையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

### 4.2.2 ஒற்றுப் பிழைகள்

இன்றைய இதழ்களில் ஒற்றுப் பிழைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. தமிழில் சொற்கள் ஒன்றை அடுத்து மற்றொன்று வரும்போது க் ச் த் ப் என்னும் வல்லின ஒற்றுக்களை இலக்கணப்படி, இயல்பாய் வரவேண்டிய இடங்களில் இடாமல் அச்சிடுவதே ஒற்றுப்பிழை என்பதாகும். உதாரணமாக, தமிழ் செல்வன் என்பது ஒற்றுப் பிழையான தொடராகும். தமிழ்ச் செல்வன் என்பதே பிழையற்ற நிலை, இத்தகைய மொழிநிலையை அறியாமல் தமிழ் இதழ்கள் ஒற்றுப் பிழைகள் நிறைந்து வெளிவருவது வருத்தத்திற்குரியது.

“தருமபுரி-திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் மதிகோன்பாளையம் என்ற ஊர் அருகே கி.பி. 8 – 9 ஆம் நூற்றாண்டில் நடந்த போர் நிகழ்ச்சியை (X) குறிப்பிடும் வீர நடுகல் சிற்பம் ஒன்றை (X) தர்மபுரி தொல்பொருள் அருங்காட்சியகம் சேகரித்துள்ளது.”

மேற்கண்ட செய்தியில் (X) என்று குறிப்பிட்ட இடங்களில் முறையே க், த் என்ற ஒற்றுக்கள் விடுபட்டுள்ளன. இத்தகைய ஒற்றுப் பிழைகள் வரக் கூடாது.

அதே போல் இரண்டாம் வரியில் 8-9ஆம் நூற்றாண்டிற்கிடையில் என்றிருக்க வேண்டும், இரண்டு நூற்றாண்டிற்கு இடையில் நடந்த நிகழ்வைக் குறிப்பிடும் முறை இதுவே.

தமிழ் இதழ்களில் ஒற்றுக்களைத் தவிர்ப்பதால் இடம் மிச்சமாகும் என்று கூறுகின்றனர். ஆனால், ஆங்கில வார்த்தைகளில் ஓர் எழுத்தை மட்டும் விட்டுவிட்டுச் செய்திகளை வெளியிடுவார்களா? வெளியிட மாட்டார்கள். செய்திகளை எழுதுவோர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், செய்தியில் கூறப்படும் தகவல்கள் சரியாகவும் துல்லியமாகவும் இருக்க வேண்டும். அதைப் போலவே மொழிப் பயன்பாட்டிலும் பிழை நேராதவாறு கருத்துச் செலுத்த வேண்டும். ஏனெனில், இக்காலத்தில் மக்கள் மொழியைக் கற்றலில் இதழ்களையே வழிகாட்டிகளாக எண்ணிவருகின்றனர். இதனால் மொழித் தூய்மை காப்பது இதழாளர்களின் முக்கியப் பொறுப்பாகும்.

### 4.2.3 கட்டுப்பாடும் நெறிமுறைகளும்

இன்றைய இதழ்கள் மக்களிடையே பொதுக் கருத்தை உருவாக்குவதிலும் ஆட்சியின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டித் திருத்துவதிலும் நிறைகளைப் பாராட்டுவதிலும் அதிக அளவில் கவனம் செலுத்துகின்றன. அதிக அளவில் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காகப் பொறுப்பற்ற முறையில் செய்திகளை இதழ்கள் வெளியிடக்கூடாது. யாருக்கும் அஞ்சிக் கொண்டு செய்திகளை வெளியிடக் கூடாது. உண்மையான செய்திகளைத் துணிவாக வெளியிட வேண்டும். தனிமனித நலன்களுக்காகச் சிலருக்குக் கட்டுப்பட்டுச் செய்திகளை வெளியிடக்கூடாது. உண்மையான செய்திகளை ஆதாரத்துடன் வெளியிட வேண்டும். செய்திகளோடு தங்கள் சொந்தக் கருத்தை வெளியிடக் கூடாது. ஆதாரமின்றி யாருடைய புகழுக்கும் களங்கம் விளைவிக்கும் செய்திகளை வெளியிடக்கூடாது.

வாசகர்களுக்குப் பயன்படக் கூடிய, தெரிய வேண்டிய செய்திகள் அனைத்தையும் முழுமையாக வெளியிட வேண்டும். உலக, தேசிய, வட்டாரச் செய்திகளில் வாசகர்களுக்குத் தேவையானதை வெளியிடல் இன்றியமையாதது. படைப்பாற்றலுடன் செய்திகளை வெளியிடல் வாசகர்களுக்கு உதவியாக இருக்கும். எளிய சொற்களைக் கையாண்டு, வாசகர்களுக்குப் புரியக்கூடிய மொழிநடையில் செய்திகள் இருத்தல் அவசியம். எந்தெந்தச் செய்திகளை எல்லாம் வாசகர்கள் விரும்புகிறார்கள் என்பதை ஒரு களஆய்வு மூலம் கண்டறிந்து இதழ்கள் செய்திகளை வெளியிடலாம். உண்மையான செய்திகளைத் துணிவுடன் வெளியிட வேண்டும். சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சி போன்றவற்றைக் காட்டும் காலக் கண்ணாடியாக இதழ்கள் விளங்க வேண்டும்.

### தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 4.3 செம்மையாக்கக் குறியீடுகளின் பயன்பாடு

‘செம்மையாக்கமும் குறியீடுகளும்’ என்ற இயலில் நாளிதழ்களில் பயன்படுத்தப்படுகின்ற குறியீடுகள் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இக்குறியீடுகள் தினமணி, தினமலர், தினத்தந்தி, தினகரன் ஆகிய நாளிதழ்களில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது பற்றி இங்குக் கூறப்படுகின்றது. இந்த நான்கு நாளிதழ்களிலும் தலைப்புச் செய்திகளில் மட்டும் செம்மையாக்கக் குறியீடுகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை 22.03.2004 தேதியிட்ட தினமணி, 20.03.2004 தேதியிட்ட மற்ற நாளிதழ்களைக் கொண்டு இங்கு விளக்கப்படுகின்றது.

### 4.3.1 கேள்விக் குறியின் பயன்பாடு (?)

கேள்விக்குறி இட்டுத் தலைப்புச் செய்திகளை நாளிதழ்கள் தொடர்ந்து வெளியிடுகின்றன. தினமணியில்

**உயர் பதவிக்கு வெளிநாட்டவர் வரலாமா?**
**காங்கிரசுக்கு பா.ஜ.க. கேள்வி**

(22.03.04) என்னும் தலைப்புச் செய்தியில் உயர் பதவிக்கு வெளிநாட்டவர் வருவது நன்மை தருமா, தீமை விளைவிக்குமா என்ற தர்க்கத்தை முன்வைப்பதாக இந்தக் கேள்வி உள்ளது. ஒரு தேசியக் கட்சியை நோக்கி மற்றொரு தேசியக் கட்சி எழுப்பிய கேள்வியை அப்படியே கேள்வியாகத் தலைப்பில் அமைப்பது செய்தியை நேரடியாக ஊட்டும் உத்தியாகும். கேள்விக்குறி நாளிதழ்களில் இப்படி உண்மையை உள்ளவாறு உணர்த்துவதற்குச் சில இடங்களில் பயன்படுகின்றது.

சில இடங்களில் இந்தச் செய்தி உண்மையா வதந்தியா என்ற வியப்பான குழப்பத்தை உணர்த்தவும் கேள்விக்குறி பயன்படுவது உண்டு. உதாரணமாக, தினமலரில்,

**திருப்போரூர் கோயில் ஆதீனம்**
**திடீர் மாயம்?**

(20-03-2004)

என்னும் தலைப்பில் ஆதீனம் மாயமானது உறுதியான செய்தியா என்ற சந்தேகத்தையே அந்தக் கேள்விக்குறி எழுப்புகின்றது. அல்லது மாயமான ஆதீனம் எங்கே போனார், என்ன ஆனார் என்ற மர்மத்தை ஆராய்வது போலவும் அந்தக் கேள்விக்குறி அர்த்தப்படுத்துவதாகக் கொள்ளலாம். மேல் விவரங்கள் முழுமையாகத் தெரியாததால் இங்கே கேள்விக்குறி பயன்படுத்தப்பட்டதாகக் கருதலாம். தினமலரில் (20-03-04) வேறொரு தலைப்புச் செய்தியில் இதே போல் கேள்விக்குறி இடப்பட்டுள்ளதையும் இங்கே குறிப்பிடலாம்.

**கோடை மழை காப்பாற்றுமா?**
**10 ஆண்டுகள் நடந்தது என்ன?**

இவற்றுள் முதல் கேள்வி எதிர்காலத்தைப் பற்றிய எதிர்பார்ப்பை

வெளிப்படுத்துவதாகவும் இரண்டாவது கேள்வி கடந்த காலம் காட்டிய உண்மையை ஆராய்ந்து கூறுவதாகவும் அமைகின்றன. இயற்கையின் நிலை ஓராண்டு போலவே அடுத்த ஆண்டும் இருக்கும் என்று நம்ப முடியாது. இந்தக் கேள்விக்குறியின் பயன், சந்தேகத்தை உருவாக்குவதாகவே உள்ளது. முழுமையாகத் தெரியாத ஒன்றைச் செய்தியாக வெளியிடும்போது கேள்விக்குறி இடப்படுவதாகக் கூறலாம்.

தினத்தந்தியில் கேள்விக்குறியிட்ட தலைப்புகள் அதிக அளவில் இடம்பெறவில்லை. செய்தியில் யாராவது கேள்வி கேட்டிருந்தால் அதைத் தலைப்பில் அப்படியே கேள்வியாகவே காட்டும் வழக்கம் தினத்தந்தியில் காணப்படுகிறது.

**அடுத்தவன் மனைவியைத் தன் மனைவி என்று**
**எப்படி உரிமை கொண்டாட முடியும்?**

மலேசிய வாலிபர் கார்த்திகேயனிடம் நீதிபதி கேள்வி

என்ற செய்தியில் கேள்விக்குறி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது நீதிபதி கேட்ட கேள்வியை அப்படியே நேரடியாகத் தந்த முறையாகும்.

முழுமையான செய்தியாக இல்லாத, பிரபலங்களைப் பற்றிய சுவாரஸ்யமான வதந்திகள் செய்தி போன்ற முக்கியத்துவத்தைப் பெறுவதும் உண்டு. அப்போது கேள்விக்குறி பயன்படுத்தப்படுவது உண்டு. எடுத்துக்காட்டாக,

**பின்லேடனின் தளபதி**
**குண்டு வீச்சில் காயம்?**

என்ற செய்தி 20-03-2004 தினகரன் நாளிதழில் செய்தித் தலைப்பில் கேள்விக்குறி பயன்படுத்தப்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம்.

1) செய்தியில் ஒரு பிரமுகரை அல்லது அமைப்பினை நோக்கி மற்றொரு பிரமுகர் கேட்ட கேள்வியை அப்படியே மேற்கோளாக எடுத்துக் கூறும்போது

2) செய்தி முழுமையாகத் தெரியாமல் பாதி தெரிந்த நிலையில்

3) ஒரு பிரபலம் பற்றிக் கசிந்துவரும் சுவையான வதந்தியைச் செய்தியாக்கும்போது.

ஆகிய சூழல்களில் கேள்விக்குறிகள் செய்தி இதழ்களில் இடம்பெறுவதை அறிந்துகொள்ளலாம்.

### 4.3.2 ஆச்சரியக் குறியின் பயன்பாடு (!)

நாளிதழ்களில் ஆச்சரியக் குறிகள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. வியப்பு மிகுந்த செய்திகளுக்கும், ஒரு நிகழ்ச்சி நடக்க வாய்ப்பு உள்ளதா என்று சந்தேகத்தின் அடிப்படையில் கொடுக்கப்படும் செய்திகளுக்கும் ஆச்சரியக்குறி இடப்படுகின்றது.

தினமணியில்,

**இன்று உலகத் தண்ணீர் தினம்**
**மழைக்காக ஏங்கும் சிறுவாணி அணை!**

என்னும் செய்தித் தலைப்பில் ஆச்சரியக்குறி பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்று எங்குப் பார்த்தாலும் தண்ணீர்ப்பஞ்சம் உள்ளது. இந்நிலையில் செழிப்பான சிறுவாணி அணை இப்படி வறட்சியாகக் காணப்படுகிறதே! மழை பெய்யுமா? இந்த அணையின் தண்ணீர் மட்டம் உயருமா? என்ற அடிப்படையில் படத்துடன் செய்தி வெளியிட்டுள்ளது.

தினமலரில் தலைப்புகள் ஓரிரு வார்த்தைகளில் தான் இப்பொழுது வெளியிடப்படுகின்றன. தலைப்புச் செய்திகள் ஓரிரண்டு தொடர்களில் கொடுத்த நிலைமை இன்று மாறிவிட்டது. ஓரிரு வார்த்தைகளில் தலைப்புச் செய்திகள் கொடுப்பது தினமலரில் மட்டும்தான் உள்ளது. சான்றாக,

**தயக்கம்!**
**கோஷ்டி கானம்!**

(20-03-04)

என்னும் இரண்டு வெவ்வேறு தலைப்புகளில் ஆச்சரியக்குறி பயன்படுத்தப் பட்டுள்ளது, இரண்டு தலைப்புகளும் வெவ்வேறு செய்திகளைக் கொண்டவை.

தினத்தந்தியில் ஆச்சரியக்குறி தலைப்புச் செய்திகளில் அதிக அளவில் பயன்படுத்தப்படவில்லை. ஒரு நாளின் இதழில் ஓரிடத்தில் தான் ஆச்சரியக்குறி பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கிரிக்கெட் போட்டியை**
**நேரில் காணமுடியவில்லையே!**

(20-03-04)

என்னும் தலைப்புச் செய்தியில் மட்டும் தினத்தந்தி ஆச்சரியக்குறியைப் பயன்படுத்தியுள்ளது. கிரிக்கெட் ரசிகர்கள் பாகிஸ்தான் செல்லமுடியவில்லையே என்பதைப் பற்றிய வருத்தத்தினை இச்செய்தி கூறுகிறது.

தினகரனில் ஆச்சரியக்குறியிட்ட செய்தித் தலைப்புகள் கொடுக்கப்படவில்லை.

### 4.3.3 கால்புள்ளியின் பயன்பாடு (,)

ஒரு தலைப்பை நீண்டதாகக் கொடுக்கும்போது எளிதாகப் படிப்பதற்காகவும் தொடர்ப்பிழை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும் நாளிதழ்களில் கால்புள்ளி ( , ) பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

**ஜாதி, பணபலத்தை எதிர்க்க**
**தலித்துகள் ஒன்றுபட வேண்டும், பெர்னாண்டஸ்**

என்று தினமணியில் கால் புள்ளி (,) பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

தினகரனில் கால்புள்ளி எந்தத் தலைப்பிலும் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் செய்திகளின் இடையே தொடர் அமைப்பைச் சீர்படுத்தக் கால்புள்ளி

பயன்படுத்தப்பட்டுள்ளது. தினமணி, தினமலர், தினத்தந்தி ஆகிய நாளிதழ்களின் செய்திகளின் இடையேயும் கால்புள்ளி தேவையான இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 4.3.4 அரைப்புள்ளியின் பயன்பாடு (;)

அரைப்புள்ளியும் நாளிதழ்களில் தொடர் அமைப்புக்களைச் சீர்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றது.

தினமணியில்,

**வெற்றி, தோல்வி கவலை இல்லை;**
**இத்தொடரில் நட்புக்கே முக்கியத்துவம்**
**பாக். பரம ரசிகர் 'சாச்சா' ஜலீஸ்**

(22-03-04)

எனும் கிரிக்கெட் தொடர்பான தலைப்புச் செய்தியில் இல்லை என்ற சொல்லின் இறுதியில் அரைப்புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தலைப்பின் நீண்ட தொடர் பிரித்துக் காட்டப்பட்டுள்ளதால் புரியும் தன்மை எளிதாக உள்ளது.

தினமலரில் கட்சிகளின் பெயர் (தி.மு.க. ; அ.தி.மு.க.; காங்.;) படிப்புகளின் பெயர் இவற்றின் இறுதியில் அரைப்புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது.

பார்வையற்ற மாணவருக்கு பிஎச்.டி; பட்டம்

என்னும் தலைப்பில் பிஎச்.டி. பட்டத்தின் இறுதியில் அரைப்புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது.

தினத்தந்தியில்,

**மின்சார மோட்டாரில் சிக்கியதில்**
**இடது கை துண்டானது;**
**கல்லூரி மாணவர் சாவு**
**விடுதியில் குளித்துக் கொண்டிருந்தபோது**
**பரிதாபம்!**

(20-03-04)

என்னும் செய்தியில் அரைப்புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது. 'துண்டானது' என்னும் சொல்லின் இறுதியில் தொடர் ஒருங்கிணைப்பிற்காக அரைப்புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது. தினகரனில் தலைப்புச் செய்திகளில் அரைப்புள்ளி பயன்படுத்தப்படவில்லை.

### 4.3.5 முற்றுப்புள்ளியின் பயன்பாடு (.)

ஒரு தொடரை முடிப்பதற்காக முற்றுப் புள்ளி பயன்படுத்தப்படுகிறது. ஆனால் செய்தித் தலைப்புகளில் தினமணி, தினமலர், தினத்தந்தி, தினகரன் ஆகிய நான்கு

இதழ்களிலுமே முற்றுப் புள்ளி பயன்படுத்தப்படவில்லை. ஏனென்றால் ஒரு புள்ளியைக் கூடுதலாகச் சேர்ப்பது இவ்விதழ்களைப் பொறுத்தவரை கூடுதல் பணி மற்றும் இட அடைப்பு என்றே எண்ணுகின்றன. அத்துடன் தலைப்புச் செய்திகளின் இறுதியில் முற்றுப்புள்ளி தேவையில்லை. புள்ளி வைக்காவிட்டாலும் தலைப்புச் செய்திகள் ஓரிரு தொடர்களில் முடிந்த பொருளை உணர்த்திவிடுவதும் முற்றுப் புள்ளியைத் தவிர்ப்பதற்குக் காரணம் எனலாம்.

### 4.3.6 முக்காற் புள்ளியின் பயன்பாடு – கோலன் (:)

ஒரு செய்தியின் தொடர்ச்சியைக் குறிப்பதற்காக முக்காற் புள்ளி பயன்படுத்தப்படுகிறது.

தினமணியில்,

முஸ்லிம்களுக்கு தனி இட ஒதுக்கீடு:
த.மு.மு.க. வலியுறுத்தல்

பேரவைத் தேர்தல்:
தெலுங்கு தேசம் வேட்பாளர் முதல் பட்டியல்

(22-3-04)

என்பன போன்ற தலைப்புச் செய்திகளைக் கூறலாம். தினமணியில் முக்காற் புள்ளிகள் தலைப்புகளில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட இருவேறு செய்திகளில் முஸ்லிம்களுக்குத் தனி இட ஒதுக்கீடு தேவை என்பதை த.மு.மு.க கட்சி வலியுறுத்துவதை இச்செய்தி உணர்த்துகிறது. முதலில் இட ஒதுக்கீடும், அதன் தொடர்ச்சியாகக் கட்சியும் சொல்லப்பட்டுள்ளதால் இங்கே முக்காற் புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது செய்தியில் பேரவைத் தேர்தலின் தொடர்ச்சியாகப் பல்வேறு கட்சிகளின் பட்டியல் பற்றிக் கூறிவிட்டுத் தெலுங்கு தேசம் கட்சி பற்றிய செய்தி முக்காற் புள்ளிகளுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமணியில்,

பேட்டிங் மோசம்: இந்தியா தோல்வி

என்ற கிரிக்கெட் செய்தியில் செய்தியின் தொடர்ச்சியைப் புலப்படுத்த முக்கால் புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது. தினத்தந்தியிலும் செய்தித் தொடர்ச்சியைத் தெரிவிப்பதற்காகவே இரட்டைப் புள்ளி பயன்படுத்தப் பட்டுள்ளது.

தினகரனில்,

மதுரையில் நடந்தது:
ஐகோர்ட் கிளை அமைக்கப் பாடுபட்ட
வழக்கறிஞர்களுக்குப் பாராட்டு விழா

(20-3-04)

என்னும் செய்தியைச் சான்றாகக் காட்டலாம். மதுரையில் கோர்ட் கிளை அமைக்கப் பாடுபட்டதால் பாராட்டு விழா என்ற இரண்டு செய்திகளை இணைக்க முக்காற் புள்ளி பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 4.3.7 ஒற்றை மேற்கோளின் பயன்பாடு (‘ ’)

தலைப்புச் செய்திகளில் ஒரு சொல்லை வித்தியாசப்படுத்திக் காட்டவோ ஒரு சிறப்புப் பெயரைச் சுட்டவோ ஒற்றை மேற்கோள் பயன்படுத்தப்படுகிறது. சான்றாகத் தினமணியில்,

மதுரை இளைஞர் தயாரித்த
‘அந்தி மழை’ வீடியோ படம்

(23-3-04)

என்னும் தலைப்புச் செய்தியைக் கூறலாம். இதில் ராஜேஷ்கன்னா என்பவர் தயாரித்த வீடியோ படம் ‘அந்தி மழை’ என்பதை, அதன் சிறப்புப் பெயரைத் தனித்து வேறுபடுத்திக்காட்ட ஒற்றை மேற்கோள் குறி பயன்படுத்தப்பட்டுள்ளது.

தினமலரில்,

மார்ச்சிலேயே வந்தது ‘ஏப்ரல்’

(20-3-04)

என்னும் தலைப்புச் செய்தியைச் சான்றாகக் கூறலாம். ஏப்ரல் மாதத்தில்தான் வெயில் 40 டிகிரி செல்சியஸைத் தொடும். ஆனால் அந்த அளவு வெயில் மார்ச் மாதத்திலேயே வந்துவிட்டது என்பதைக் குறிக்கவே ‘ஏப்ரல்’ ஒற்றை மேற்கோளில் தரப்பட்டுள்ளது.

தினத்தந்தியில்,

மதுரையின் ‘அறிவுக்கரசி’
மாணவி ஜனனி பிரியா
பல்கலைக்கழக விழாவில்
தேர்ந்தெடுக்கப்பட்டார்

(20-3-04)

என்னும் செய்தியைச் சான்றாகக் கூறலாம். இதில் அறிவுப் போட்டியில் வென்ற மாணவிக்கு ‘அறிவுக்கரசி’ என்ற சிறப்புப் பட்டம் கொடுக்கப்படுவதைக் குறிப்பாகக் காட்டவே ஒற்றை மேற்கோள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தினகரனில்,

‘ராமர் கோயில்’ கொள்கையை
ஒருபோதும் கைவிட மாட்டோம்

(20-3-04)

என்று வெளியாகியுள்ள செய்தியைச் சான்றாகக் கூறலாம். 'ராமர் கோயில்' என்ற, எல்லோரும் அறிந்த சிக்கலின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் காட்டவே இங்கே ஒற்றை மேற்கோள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

4.3.8 இரட்டை மேற்கோளின் பயன்பாடு (" ")

நாளிதழ்களில் தலைப்புச் செய்திகளில் இரட்டை மேற்கோள் குறிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு தலைப்பின் ஆரம்பத்திலும் முடிவிலும் இரட்டை மேற்கோள் பயன்படுத்தப்படுகின்றது. ஒருவர் சொன்ன வாசகத்தை முழுவதும் மாற்றாமல் அப்படியே வெளியிட இரட்டை மேற்கோள் பயன்படுத்தப்படுகின்றது. தினமணியில் தலைப்புச் செய்திகளில் இரட்டை மேற்கோள் பயன்படுத்தப்படவில்லை.

**தினமலரில்,**

**"அடுத்தவன் மனைவியைத் தேடி**
**சென்னை வந்து தகராறு செய்கிறாயா?"**
**மலேசியா வாலிபரிடம் நீதிபதி கேள்வி**

(20-3-04)

என்ற செய்தியில், நீதிபதி கேட்ட கேள்வியை அவரது வாசகமாக அப்படியே வெளியிட்டிருப்பதால் இங்கே இரட்டை மேற்கோள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தினத்தந்தியில்,**

**தமிழகத் தேர்தல் பாதுகாப்பிற்கு**
**"65 கம்பெனி மத்திய போலீசார் வருவார்கள்" டி.ஜி.பி. தகவல்**

(20-3-04)

என்று வெளியிட்டுள்ள செய்தியினைச் சான்றாகக் கூறலாம். டி.ஜி.பி. கூறும் தகவலை அப்படியே தந்துள்ளதால் அந்த வாசகம் இரட்டை மேற்கோள் குறிக்குள் தரப்பட்டுள்ளது.

தினகரனின் தலைப்புச் செய்திகளில் இரட்டை மேற்கோள் பயன்படுத்தப்படவில்லை.

4.3.9 சிறுகோட்டின் பயன்பாடு (-)

நாளிதழ்களில் சிறுகோடுகள் இரண்டு பெயர்கள் அடுத்தடுத்து வருமிடங்களில் அவற்றின் இடையேயும், எண்களை அடுத்து இத்தனாவது என்று குறிப்பிடும்பொழுதும், இது இன்னாருடைய கருத்து அல்லது வாக்குமூலம் என்பதைச் சுட்டும்போதும் பயன்படுத்தப்படுகின்றன.

**தினமணியில்,**

வாஜ்பேயி பிரதமராக நீடித்தால்
இந்தியா – பாக்கிஸ்தான் இணையும்
வாய்ப்பு உண்டு
இல.கணேசன் கருத்து

(22-3-04)

என்று வெளியிட்டுள்ள செய்தியைச் சான்றாகக் கூறலாம். இச்செய்தியில் இந்தியா-பாக்கிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளின் பெயர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்குச் சிறுகோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது மூன்றாவது என்று குறிப்பிடும்போது, எண்ணை அடுத்தும் சிறுகோடு இடப்படும். அதற்குச் சான்றாக,

மக்களவைத் தேர்தல்: 2-வது பட்டியலை வெளியிட்டது தேசியவாத காங்கிரஸ்

(22-3-04)

என்ற செய்தியைச் சான்றாகக் காட்டலாம்.

தினமலரில்,

புவனேஸ்வரி கைது செய்யப்பட்டது
எப்படி? – பெண் போலீஸ் ஏட்டு சாட்சியம்

(20-3-04)

என்ற செய்தி வெளியிட்டுள்ளதைக் கூறலாம், இதில் ‘எப்படி?’ என்னும் சொல்லிற்கு அடுத்து சிறுகோடு பயன்படுத்தி, அக்கருத்தை விளக்கி சாட்சியம் சொன்னவர் இன்னார் (பெண் போலீஸ்) என்பதை அந்தச் சிறுகோடு குறிப்பதாக உள்ளது.

தினத்தந்தியில்,

பள்ளிக்கூடம் – பாலத்தில்
தேர்தல் விளம்பரங்கள்
அரசியல் கட்சியினர் 5 பேர் மீது வழக்கு

(20-3-04)

என்ற தலைப்புச் செய்தியில் சிறுகோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிக்கூடம், பாலம் என்னும் இரண்டு சொற்களும் பெயர்ச் சொற்கள் என்பதால் அவற்றைப் பிரித்துக்காட்ட இங்கே சிறுகோடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

தினகரனில்,

முன்னாள் தலைமை தேர்தல் கமிஷனர்
எம்.எஸ்.கில்-கருணாகரன்
6 பேர் எம்.பி.யாகத் தேர்வு

(20-3-04)

என்று வெளியான செய்தியில் இரண்டு பெயர்களுக்கு இடையே சிறுகோடு பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம்.

பல்வேறு செம்மையாக்கக் குறியீடுகள் நாளிதழ்களில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து இக்கட்டுரை விளக்கியுள்ளது.

## 4.4 தொகுப்புரை

இதழ் வெளியீட்டில் புதுதில்லி, மகாராஷ்டிரம், தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்கள் இந்திய அளவில் முன்னணியில் உள்ளன. இதழ்களைச் செய்தித்தாள்கள், பருவ இதழ்கள் என்று பொதுவாக வகைப்படுத்தலாம். வாசகர்கள் எப்படிப்பட்ட செய்திகளை விரும்புகிறார்களோ அப்படிப்பட்ட செய்திகளையே இதழ்கள் வெளியிட வேண்டும். மேலை நாடுகளைப் போன்றே நம் நாட்டிலும் புலனாய்வு இதழ்கள் தற்போது வெளியிடப்படுகின்றன. சில இதழ்கள் விற்பனையைப் பெருக்கவும் வருமானத்தை அதிகரிக்கவும் பாலுணர்வுச் செய்திகளையும் படங்களையும் வெளியிடுகின்றன. பொருளாதார நிலை தாழ்ந்தாலும் கொள்கை இதழ்கள் தங்களின் கொள்கையிலிருந்து தவறுவதில்லை.

தனிமனிதர்களின் விருப்பு வெறுப்புகளுக்கிணங்கச் செய்திகளை வெளியிடக் கூடாது. ஒற்றுப் பிழைகளைத் தமிழ் இதழ்கள் கண்டு கொள்வதில்லை. தற்கால நாளிதழ்களில் ஒன்பது வகையான செம்மையாக்கக் குறியீடுகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது பற்றி இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 5

## P20445 அச்சிடுதலின் நவீனப் போக்குகள்

### இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இவ்வியலில் அச்சுக்கலை உருவான வரலாறு, இந்தியாவிற்கு அச்சுக்கலை கொண்டு வந்ததற்கான காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் அச்சுக்கலை தோன்றி வளர்ந்த வரலாறு, அச்சிடுதலில் பழைய, நவீன முறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பல்வகையான எழுத்துக்கள் பற்றியும் இந்தப் பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தைப் படித்து முடிக்கும் பொழுது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறலாம்.

- பாபிலோனியா, சீனாவில் அச்சுக்கலை வளர்ந்த விதத்தை அறியலாம்.

- அச்சடித்தல் தொடக்கக் காலத்திலிருந்து பல்வேறு படிநிலைகளில் வளர்ந்து இன்றுள்ள நிலையை அடைந்துள்ளதைப் புரிந்து கொள்ளலாம்.

- கோவா, தரங்கம்பாடி ஆகிய இரு இடங்களிலும் அச்சுக் கூடங்கள் நிறுவி ஆங்கிலேயர்கள் அச்சுக்கலை வளர உதவிய நிலையை அறியலாம்.

- கையால் அச்சுக் கோப்பது, அச்சுப்பொறியின் மூலம் அச்சுக் கோத்தல் போன்ற முறைகளில் எவ்வாறு அச்சடிப்பது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

- அச்சடிக்கும் இயந்திரங்களான காலால் மிதித்து அச்சடிக்கும் இயந்திரம், உருளை அச்சு இயந்திரம், சுழல் அச்சுப்பொறி இயந்திரம், ஆப்செட் அச்சடிக்கும் இயந்திரம் ஆகியன இயங்கும் விதம் பற்றி அறியலாம்.

- டெலி டைப் செட்டர், டெலக்ஸ், போட்டோ டைப் செட்டிங், கணினி அச்சு அமைப்பு போன்றவை இயங்கும் விதம் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

- அச்சிடுவதற்குப் பயன்படும் புள்ளி வகைகள் பற்றியும் இப்பாடத்தில் படித்துப் புரிந்துகொள்ளலாம்.

# பாட அமைப்பு

5.0 பாட முன்னுரை
5.1 அச்சுக்கலையின் வரலாறு
5.2 அச்சுக்கலையின் வளர்ச்சி
5.3 அச்சிடும் முறைகள்
5.4 அச்சுவார்க்கும் பொறிகள்
5.5 படங்களைப் பதிப்பிக்கும்முறை
தன் மதிப்பீடு : வினாக்கள்- I
5.6 அச்சிடுதலில் நவீனப்போக்குகள்
5.7 அச்சிடுவதற்குப் பயன்படும் எழுத்துக்கள்
5.8 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 5.0 பாட முன்னுரை

பண்டைய காலங்களில் இலக்கியங்கள் ஏடுகளில் எழுதப்பட்டன. அதை எழுதுவதற்கும் படிப்பதற்கும் அதிக முயற்சி தேவைப்பட்டது. அச்சுக்கலை கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அனைத்துச் செய்திகளையும் அறியும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இன்றைய உலகம் செய்தித்தாள் உலகமாக மாறிவிட்டது. நூல்கள், இதழ்கள், அறிக்கைகள், விளம்பரங்கள், அழைப்பிதழ்கள், நாட்குறிப்புகள் அனைத்தும் நம் வாழ்வுடன் கலந்துவிட்டன; இவையின்றி நாம் வாழ முடியாது; இதற்கெல்லாம் காரணம் அச்சுக்கலையின் தோற்றமே.

## 5.1 அச்சுக்கலையின் வரலாறு

முற்காலத்தில் பலகையிலும் கல்லிலும் தமக்கு வேண்டிய எழுத்துக்களையோ, முத்திரைகளையோ, குறிகளையோ செதுக்கினர். அவற்றின் மீது மையைத் தடவி நகல் எடுக்கும் பழக்கம் ஏற்பட்டது. மேடு பள்ளங்களைக் கொண்ட பரப்பு ஒன்றின் மேல் மையைத் தடவிக் காகிதத்திலோ அல்லது வேறு ஒரு பொருளின் மீதோ அழுத்திப் பதிவெடுக்கும் முறை அடுத்துக் கையாளப்பட்டது. களிமண் அல்லது மெழுகில் இவ்வகையான அச்சுப் பதிவுகள் செய்யப்பட்டன.

### 5.1.1 தொடக்கக் காலத்தில் அச்சுக்கலை

சங்க இலக்கியங்களில் கண்ணெழுத்து, வட்டெழுத்து போன்ற வடிவங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இவற்றை எழுதுவோர் ‘கண்ணெழுத்தாளர்’ என்று அழைக்கப்பட்டனர். முத்திரையிடுதலும் இலச்சினையிடுதலும் பாபிலோனியாவிலும், சீனாவிலும் தொடக்க காலத்தில் ஏற்பட்ட வரலாறாகும். செதுக்குத் தகடுகளில் எழுத்துக்கள் பதிக்கப்பட்டன. அடுத்து, கல்வெட்டுக்களில் மையைத் தடவிப் பதிப்பு எடுக்கும் பழக்கம் ஏற்பட்டது. இதுவே மரத்தில் எழுத்துக்களை வடிவமைத்துப் புத்தகங்கள் பதிப்பிக்க முதன்முதலில் அடிப்படையாக அமைந்தது. கல்வெட்டிலிருந்து உண்மை நகல் எடுப்பதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். கல்வெட்டுத் துறைகளிலிருந்து மர அச்சுப்படி முறையும் அதிலிருந்து நகல் எடுப்பு முறையும் வளர்ச்சியடைந்தன. உலக நாடுகள் சமயக் கருத்துக்களைப் பரப்பவே இக்கலையை உருவாக்கின.

- நாரா அச்சுமுறை

அடுத்த நிலையில் நெசவுத் துணியில் அச்சிடும் முறை பரவியது. மரத்துண்டுகளில் செதுக்கப்பட்ட விதவிதமான உருவங்களைக் கொண்டு துணியில் அச்சிடுவது இம்முறையாகும். இம்முறை இந்தியாவிலிருந்து தான் மற்ற நாடுகளுக்கும் பரவியது. இவ்வாறு அச்சடிக்கப்பட்டவை சப்பானில் ‘நாரா’ என்றழைக்கப்பட்டன. இவ்வச்சு முறை பின்னர் காகிதத்தில் அச்சடிக்கும் முறைக்கு வழிவகுத்தது.

- காகித நாணயம்

சீனாவில் அச்சுக்கலை தோன்ற அடிப்படையாக அமைந்தது காகித நாணயமாகும். அதன்பின் சீனாவில் கி-சென் என்னும் இடத்தில் முதன்முதலில் காகித நாணயம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

- வழிபாட்டுப் படங்கள்

இத்தாலி நாட்டில் 15ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அரபுமொழியில் அச்சு வேலைகள் சில நடைபெற்றன. குரானும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. முற்காலத்தில் அச்சிடப்பட்ட அச்சுப் படங்களில் பெரும்பாலானவை வழிபாட்டுப் படங்களாகும். ஒருசில ஆண்டுகளுக்குப்பின் இப்படங்களின் கீழ், சொற்கள் அச்சடிக்கும் முறை வளர்ந்தது. இவற்றை நூல்களாக அச்சடிக்கும் முறை வளர்ந்தது; சீனாவின் இம்முறை ஐரோப்பாவிலும் பரவி வளர்ச்சி பெற்றது.

### 5.1.2 படி எடுக்கும் முறை

அச்சுக்கலையில் புதிய முறையைப் புகுத்தச் சீனநாட்டினர் விரும்பினர். 11ஆம் நூற்றாண்டில் சீனாவை ஆட்சிபுரிந்த ‘சிங்கிலி’ மன்னன் காலத்தில் ‘பி.செங்’ என்பவர் தனி அச்சை முதன்முதலில் கண்டுபிடித்தார். நீண்ட களிமண் துண்டை எடுத்துக்கொண்டு நாணயத்தின் விளிம்புபோல் அதில் எழுத்துக்களைப் பதிக்க வேண்டும். பதித்த எழுத்துக்களைத் தனித்தனியாக மண்பாண்டம் சுடுவது போல் தீயில் போட்டுச் சுடவேண்டும். உறுதியான இந்த எழுத்துக்களை ஓர் இரும்புத் தகட்டில் காகிதச் சாம்பல், பைன் மரப் பிசின், மெழுகு ஆகியவற்றின் கலவையைப் பூச வேண்டும். பின்பு அதன்மேல் இரும்புச் சட்டத்தைப் பொருத்தி, சுட்ட களிமண் அச்சுக்கள் அடுக்கப்படும். நெருப்பில் தகட்டின் அடிப்பாகம் சூடேற்றப்படும். இச்சூட்டினால் தகட்டில் உள்ள பிசின் இளகத் தொடங்கும். இப்பொழுது வழுவழுப்பான மரப்பலகையைக் கொண்டு தேய்க்க வேண்டும். இதனால் அச்சுக்கள் சமமாகப் படிந்து இரும்புத் தட்டு முழுவதும் எழுத்துக்கள் அழுத்தி ஓர் உறுதியான அச்செழுத்துப் படி உண்டாகும். பின்பு இதை வைத்துப் பல படிகள் எடுக்கலாம். இதுவே ‘பி.செங்’ முறை எனப்படும். இதன் மூலம் ஆயிரக்கணக்கில் படிகள் எடுக்கலாம்.

### 5.1.3 எழுத்துக்கள்

இதற்கு அடுத்து, ‘வாங் செங்’ மரத்தாலான அச்சுப்படிகள் பற்றிக் குறிப்பிடுகிறார். இதன்படி அச்சுக் கோப்பவரின் படிவம் மரத்தால் செய்யப்பட்டதாகும். மூங்கில் பத்தைகள் கோடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு எழுத்தின் வடிவமும் தனித்தனித் துண்டுகளாக அறுக்கப்பட்டு ஒரே வடிவமாக்கப்பட்டுத் தொகுக்கப்படும். இடையில் ஏற்படும் வெற்றிடத்தை மூங்கில் துண்டுகளைக் கொண்டு இடைவெளியின்றி அடைத்தனர். அச்சுக்கள் சரியாக வடிவமைக்கப் பட்டவுடன் அதன்மேல் மை தடவிப் படிகள் அச்சிடப்பட்டன. ‘பி.செங்’ என்பவரே எழுத்துக்களை முதலில் களிமண்ணால் செய்தும் பிறகு தகரத்தால் செய்தும் உருவாக்கினார். தனித்தனி எழுத்துக்களுக்காக மரத்தினால் செய்த எழுத்துகளைப் பயன்படுத்தினார். மங்கோலியர் காலத்திலேயே இந்த அச்சுமுறை வழக்கத்திற்கு வந்தது. இது மற்ற நாடுகளுக்கும் பரவியது.

- உலோக அச்சு எழுத்துக்கள்

அடுத்த நிலையில் உலோகத்தால் அச்சு எழுத்துக்கள் உருவாக்கப்பட்டன. கொரியா, சீனா ஆகிய நாடுகளில் 18ஆம் நூற்றாண்டு வரை இம்முறை வழக்கில் இருந்தது. அரசர்கள் இந்நாடுகளில் இலக்கியம், கல்வி, சமயம் ஆகியவற்றை வளர்க்கப் பயன்படுத்தினர்.

### 5.1.4 அச்சுக்கலையின் தந்தை

ஐரோப்பாவில் கையெழுத்துப் படிகள் அதிக வழக்கில் இருந்தன. இக்காலத்தில் அப்படிகளில் உள்ள எழுத்துக்களைப் போலவே உலோக அச்சில் வடிவமைத்தனர். அந்த எழுத்துக்களை வார்த்து அச்சடிக்கும் முறை வழக்கிற்குக் கொண்டுவரப்பட்டது. 15ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் கையால் எழுதப்பட்ட எழுத்துகளையே மாதிரியாகக் கொண்டு அச்சு உருவாக்கி நூல்களை வெளியிட்டனர். இம்முறையால்

கையெழுத்திற்கும் அச்சிற்கும் வேறுபாடு காணப்படவில்லை. ஜான் கூட்டன்பர்க் எனும் ஜெர்மானியர் முதன்முதலில் ஐரோப்பாவில் தனித்தனி உலோக எழுத்துகளை 1437இல் உருவாக்கி, அச்சுப்பொறியையும் கண்டுபிடித்தார். இதனால் இவர் ‘அச்சுக்கலையின் தந்தை’ என்று போற்றப்படுகின்றார்.

## (Gutenburg) கூட்டன்பர்க்

தனித்தனி எழுத்துக்களைக் கொண்டு ‘விவிலிய நூல்’ முதன்முதலில் தோலாலான தாளில் அச்சிடப்பட்டது. இந்நூலில் ஒரு பக்கத்திற்கு 35 வரிகள் இருந்தன. இவரது அச்சு இயந்திரம், வேலையை எளிதாக்கி அதிகப் படிகள் எடுக்க உதவியது. கூட்டன்பர்க்கின் மாணவரான நியூ மெரிஸ்டர் என்பவர் பல நாடுகளில் அச்சுத் தொழில் முன்னேறக் காரணமாக இருந்தார். அச்சுப் பெருக்கத்தால் பல்துறை நூல்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. நூல்நிலையங்கள் தோன்றின. இது உலகளாவிய தொழிலாக மாறியது.

## 5.2 அச்சுக்கலையின் வளர்ச்சி

அச்சுக்கலை ஐரோப்பியர்களால் நம் நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட பொறியியல் நுட்பமாகும். இந்தியாவிற்கு முதல் அச்சு இயந்திரம் கி.பி.1550இல் ஸ்பெயின் நாட்டிலிருந்து கோவாவிற்குக் கொண்டு வரப்பட்டது. இப்பொறிகளின் மூலம் ஏட்டு வடிவிலிருந்த பல இலக்கியங்கள் நூல் வடிவிற்கு மாற்றப்பட்டன. இந்தியாவில் துணியில் அச்சடிக்கும் முறை ஏற்கெனவே இருந்தது.

### 5.2.1 தொடக்கக் காலம்

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தங்களின் சிறப்புகளையும் நிகழ்ச்சிகளையும் கோவில் மதில்களிலும் கற்பாறைகளிலும் செப்புத் தகடுகளிலும் பொறித்து வைத்தனர். பொதுமக்களும் புலவர்களும் தமது எண்ணங்களை ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தனர். இத்தாலியிலிருந்து கி.பி.1700இல் தமிழ்நாட்டிற்கு வந்த வீரமாமுனிவர் பல்வேறு நிலையில் எழுதப்பட்ட எழுத்து வடிவங்களில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். இவர் தமிழ் எழுத்து வடிவங்களில் இருந்த மயக்கத்தை நீக்கினார். இதனால் இவர் ‘தமிழ் வரிவடிவின் தந்தை’ என்றழைக்கப்படுகிறார்.

- கோவாவில் அச்சுக்கலை

தமிழ்நாட்டில் 16ஆம் நூற்றாண்டிலிருந்துதான் அச்சுக்கலை உருவாக்கப்பட்டது. ஐரோப்பியக் கிறித்துவர்களே தமிழ் எழுத்துகளை அச்சில் கொண்டு வரும் வழியைக் கண்டுபிடித்தனர். இவர்களது மதத்தைப் பரப்ப இக்கலை அவர்களுக்கு உதவியது. எனவே இக்கலையை வளர்க்க ஆர்வம் காட்டினர். மேலும் அச்சு இயந்திரங்களை ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பும்படி கூறினர். கி.பி.1556 செப்டம்பர் 6இல் கோவாவிற்கு வந்துசேர்ந்த போர்ச்சுக்கீசியக் கப்பல் அச்சுப்பொறியையும் அச்சுக்கலை வல்லுநர்களையும் இந்தியாவிற்குக் கொண்டு வந்தது.

### 5.2.2 முதல் அச்சகம்

கொச்சிப் பகுதியில் உள்ள அம்பலக்காட்டில் ஏசு சபையினரால் மரத்தில் செதுக்கப்பட்ட தமிழ் எழுத்துக்களைக் கொண்டு முதலில் தமிழ் நூல் அச்சிடப்பட்டது. மதத்தைப் பரப்ப வந்த ஜெர்மனியின் சீகன்பால்கு பாதிரியார் 1713இல் தஞ்சை மாவட்டத்தில் உள்ள தரங்கம்பாடி என்னும் கடற்கரை நகருக்கு அச்சுப்பொறியை வரவழைத்தார். இதனைக் கொண்டு முதல் அச்சுக்கூடம் தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது ‘டி நோபிலி அச்சகம்’ என்ற பெயரில் உருவான அந்த அச்சுக்கூடம் இன்றும் அங்கே செயல்பட்டு வருகின்றது. சீகன்பால்கு காகித ஆலை ஒன்றையும் தரங்கம்பாடியில் ஏற்படுத்தினார்.

‘முதலில் அச்சேறிய தமிழ் நூல்கள்’ என்னும் கட்டுரையில் தனிநாயக அடிகள் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். “முதல் அச்சுக்களைத் தமிழில் 1576இல் கோவாவில் அமைத்தனர். பின்பு 1577இல் கொல்லத்தில் அமைத்தனர். கோவாவில் செய்த தமிழ் அச்சுக்கள் சிறந்தவையாய் இல்லை. அதனால் கொல்லத்தில் புதிதாய் அமைத்தனர். அக்காலக் கல்வெட்டுக்களுடனும் செப்புத்தகடுகளுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவற்றின் வடிவம் உறுதியாகவும் அழகாகவும் இருந்தன” என்கிறார்.

- முன்னோடி

பொதுவாக, சென்னையிலிருந்தே பல மொழிகளில் அச்சுக்கலை எழுத்துக்களை உருவாக்கி மும்பை போன்ற பிறபகுதிகளுக்கு அனுப்பி வந்தனர். பின்புதான் அச்சுவார்க்கும் கூடங்கள் ஆங்காங்கே ஏற்பட்டன. எனவே இந்தியாவின் அச்சுக்கலைத் தோற்றம் தமிழ்நாட்டிலிருந்துதான் தொடங்கியது என்று கூறலாம். இந்திய மொழிகளில் அச்சு எழுத்தும் அச்சுப் புத்தகமும் உருவாக்கப்பட்டது தமிழில்தான் எனலாம்.

## 5.3 அச்சிடும் முறைகள்

அச்சடிப்பதற்கு முன்னால் அச்சிடப்படும் செய்திகள் அடுக்கப்பட்டுப் பக்க அளவில் முறைப்படுத்தப்படுகின்றன. அதை அச்சுச் கோத்தல் என்பர்.

### 5.3.1 அச்சுக் கோத்தல்

அச்செழுத்துகளை அடுக்குவதற்கு இரண்டு முறைகள் தற்போதும் கையாளப்படுகின்றன. அவை:

1) கையால் அச்சுக் கோத்தல்

2) அச்சு வார்ப்புப் பொறியின் மூலம் அச்சுக் கோத்தல்

என்பனவாகும்.

- கையால் அச்சுக் கோத்தல்

பல்வேறு குழிகளில் நிரப்பப்பட்ட பலவகை எழுத்துகளைச் செய்திகளுக்கு ஏற்ப, பயிற்சியுள்ள அச்சுக் கோப்பாளரின் உதவியால் அடுக்கி அச்சிடுவது ஒரு வகையாகும். இம்முறையைப் பின்பற்றுவதால் காலம் அதிகமாகும். அதிக அளவில் செய்திகள் இருப்பின் அவற்றை விரைவாக அடுக்கி அச்சிட முடியாது. இருப்பினும் சிறிய இதழ்களில் இம்முறை இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது. பல ஆண்டுகள் இம்முறையைக் கையாண்டு பணிபுரிந்தவர்களால்தான் இந்த வகை அச்சிடும் முறையினை விரைவாகச் செய்ய முடியும்.

### 5.3.2 அச்சு வார்ப்புப் பொறியில் அச்சுக் கோத்தல்

அச்சு வார்ப்புப் பொறிகளின் மூலம் அச்சுக் கோக்கும் முறையே 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இதழியல் உலகில் பெரிதும் பின்பற்றப்பட்டு வந்தது. (தற்போது பெரும்பாலும் அனைத்து இதழியல் அச்சுக்கூடங்களும் டி.டி.பி D.T.P, – எனப்படும் கணினி தட்டச்சுமுறைக்கு மாறிவிட்டன என்பது அறிக.).

## 5.4 அச்சுவார்க்கும் பொறிகள்

அச்சு வார்க்கும் பொறிகள் இரு வகைப்படும். அவை:

1) தனி எழுத்து அச்சு வார்ப்பு முறை (Mono-type method)

2) தொடர் எழுத்து அச்சு வார்ப்பு முறை (Lino- type method)

என்பனவாகும்.

### 5.4.1 தனி எழுத்து அச்சு வார்ப்பு முறை

தனி எழுத்து அச்சு வார்ப்பு முறையை டால்பர்ட்டு லான்ஸ்டன் (Tolbert Lanston) என்பவர் வடிவமைத்தார். இந்தப் பொறியில் 276 பொத்தான்கள் (keys) இருக்கும். தட்டச்சுப் பொறியைப் போல இப்பொறியில் தலைப்பு எழுத்துக்கள், சாய்வு எழுத்துக்கள் (Italic) பெரிய எழுத்துக்கள் (Bold-face), எண்கள் (Figures), புள்ளிகள், கால்புள்ளிகள், அரைப்புள்ளிகள், கோடுகள் முதலிய குறிகள், இடநிரப்பிகள் போன்ற பல்வேறு வகையான எழுத்துகளும் இருக்கும்.

இப்பொறியின் ஒரு பகுதி அச்சடிக்கும் பொத்தான்களால் குறியீடு இடும் பகுதியாலும் (Key-code Section), மறுபகுதி அச்செழுத்தை உருவாக்கி வார்க்கும் பகுதியாலும் (Casting Section) இருநிலைகளில் இயங்குவதாக அமைக்கப்பட்டது. தட்டச்சு செய்வதற்கு இணையான எழுத்தை, உருகிவேகும் ஈயத்திலிருந்து புத்தம் புதியதாய் அந்த இயந்திரம் உருவாக்கும். ஒவ்வொரு நாளும் உருவான புதிய எழுத்துகளால் ஆன செய்திகளை அச்சடித்ததும் மறுநாள் அவற்றை அந்த இயந்திர உலையில் கொட்டி உருக்கிவிடுவார்கள். மறுநாள் அதே ஈயத்திலிருந்து புதியதாய் எழுத்துக்களை உருவாக்கி அச்சடிப்பார்கள். இப்பொறியை இயக்குபவர்கள் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக இருப்பர். தட்டச்சில் ஏதாயினும் பிழை ஏற்பட்டால், பிழையான எழுத்தை மட்டும் அகற்றிவிட்டுப் புதிய சரியான எழுத்தைச் சேர்த்துக்கொள்ள இம்முறையில் வசதியுள்ளது. ஒவ்வொரு தனித்தனி எழுத்தாக உருவாக்குவதால் இது தனி எழுத்து அச்சு வார்ப்பு முறை என்று அழைக்கப்பட்டது. தமிழ் நாளிதழ்களில் முன்பு தினமணி இதழ் 1980-90களில் இந்தத் தனி எழுத்து அச்சு வார்ப்பு முறையிலேயே அச்சிடப்பட்டு வெளிவந்தது.

### 5.4.2 தொடர் எழுத்து அச்சுவார்ப்புமுறை

தொடர் எழுத்து அச்சு வார்ப்பு முறை வரிவரியாக அச்சுக்கட்டை வார்க்கும் முறையாகும். ஒரு வரியில் சில சொற்கள் அமையும். இந்த முறையை ‘ஒட்மர் மெர்கன்தாலர்’ (Ottmar Merganthalar) என்னும் ஜெர்மானியர் 1889இல் வடிவமைத்தார். இப்பொறி பெரிய அளவில் அமைந்ததாகும். இப்பொறியில் குழாய்களும் நெம்புகளும் பல்சக்கரங்களும் வார்ப்புக்கான அச்சுக்களும் அமைந்திருக்கும்.

தொடர் அச்சுப்பொறியும் இருபகுதிகளாக அமைந்துள்ளது. ஆனால் இவ்விரு பகுதிகளும் தனி எழுத்து அச்சு வார்த்தல் முறை போல் தனித்தனியாக இல்லாமல், இயந்திரத்தின் உள்ளேயே இரண்டு நிலையும் இணைந்து செயல்படும் விதத்தில்

அமைக்கப்பட்டுள்ளது. செய்திகளை இதில் தட்டச்சு செய்யும்போது உள்ளே உருவாகும் குறியீடுகளுக்கு இணையான எழுத்துக்கள் வார்க்கப்படும். எழுத்துக்கள் சொற்களாகி வரிவரியாக, உருகிவேகும் ஈயத்திலிருந்து புத்தம்புதிய அச்சு வரிகளை அந்த இயந்திரம் உருவாக்கும். ஒவ்வொரு நாளும் உருவான செய்திகளை அச்சடித்ததும் மறுநாள் அவற்றை அந்த இயந்திர உலையில் கொட்டி உருக்கிவிடுவார்கள். மறுநாள் அதே ஈயத்திலிருந்து புதிதாய் வரிகளை உருவாக்கி அச்சடிப்பார்கள்.

இப்பொறியின் அமைப்பு கீழ்க்காணுமாறு அமைந்துள்ளது.

1) பொத்தான் அமைப்பு (Key Board)

2) சக்தியூட்டி (Magazine)

3) அச்சுவார்க்கும் பொறி (Casting Machinery)

4) அச்சுக்களை வெளியிடும் பொறி (Distributing Machinery)

- அச்சு வார்க்கும் பொறி

பொத்தான்கள் அழுத்தப்படுவதற்கு ஏற்பப் பல்வேறு எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து வார்த்தை வரிகளாகி, அவ்வரிகள் இப்பகுதியில் புத்தம் புதியனவாக வார்க்கப்படும். வெள்ளை ஈயத்தாலான இவ்வரிகள் வெள்ளி 'பிஸ்கெட்' போல மினுமினுக்கும். செய்தித்தாளின் ஒரு 'கால' (Column) அளவில் இந்த வாசகங்கள் வரிவரியாகத் தனித்தனியே பிரித்தெடுக்கும் வகையில் உருவாகும்.

- அச்சுக்களை வெளியிடும் பொறி

அழுத்தப்பட்ட வரிகள் கொதிக்கும் ஈய உலோகத்திலிருந்து உருவாவதால், மிகவும் சூடாக இருக்கும். வார்க்கப்பட்ட இந்தச் சூடான வரிகளின் மீது குளிர்ந்த தண்ணீர் பீச்சியடிக்கப்பட்டுக் குளிரூட்டப்படும். குளிரூட்டப்பட்ட வரிகளை இப்பொறி வெளியிடும் வேலையைச் செய்கிறது. வரிகள் முறையான பத்திகளாக அடுக்கப்பட்டு அச்சடிக்க ஏதுவாக எல்லா ஏற்பாடுகளையும் இந்தப் பொறி உருவாக்கித் தருகிறது.

இம்முறையில் ஒரு வரியில் ஒரே எழுத்து மட்டும் பிழையாகத் தவறுதலாக வந்துவிட்டால் அந்த எழுத்தை மட்டும் மாற்ற முடியாது. அந்த வரி முழுவதும் பயனற்றதாகிவிடும். அந்த வரியையே திரும்ப உருவாக்க வேண்டியிருக்கும். தனி எழுத்து முறையில் எழுத்துக்கள் சரிந்துவிட்டால் ஒன்று சேர்க்க முடியாதது போன்ற சிக்கல் இதில் இல்லை. சரிந்தாலும் வரிவரியாக இருப்பதால் பிஸ்கெட்டை அடுக்குவதுபோல எளிதில் ஒன்று சேர்த்துவிடலாம். இதுவே இம்முறையிலுள்ள பெரிய வசதி. தனித்தனி எழுத்தாக இல்லாமல், தொடர் எழுத்துக்களைக் கொண்ட வரியாக வளர்க்கப்படுவதால் இது தொடர் எழுத்து அச்சு வார்ப்பு முறை என்று அழைக்கப்படுகிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் 1980-90களில் இந்தத் தொடர் எழுத்து அச்சு வார்ப்பு முறையிலேயே அச்சிடப்பட்டு வெளிவந்தது.

## 5.5 படங்களைப் பதிப்பிக்கும் முறை

தொடக்கக் காலங்களில் மரத்திலும் கல்லிலும் செதுக்கப்பட்டுப் படங்கள் பதிப்பிக்கப்பட்டன. இப்படப் பதிவுக்கு இன்றைய நவீன காலத்தில் பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. அவை:

1) மரத்தைச் செதுக்கிப் பதிப்பது (Wood cutting method)

2) உலோகத்தைச் செதுக்கிப் பதிப்பது (metal engraving method)

3) அரித்தல் முறை (Etching method)

4) எழுத்தச்சுப் படிமை முறை (Lithography method)

என்பன படப்பதிவில் கையாளப்படுகிற முறைகளாகும்.

மேற்கண்ட பழைய முறைகளைத் தவிர இன்று வளர்ந்து வருகிற அறிவியல் வளர்ச்சியால் படப்பதிவிற்குப் பல்வேறு அதிநவீன முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவை:

1) புகைப்பட எழுத்தச்சுப் படிமை முறை (Photo Lithography)

2) தொய்வகப் பதிப்பு முறை (Leno cuts)

3) ஆப்செட் பதிவு முறை (Offset process)

4) புகைப்படப் பதிவு முறை (Photograving)

போன்ற பல்வேறு முறைகளும் படப்பதிவு முறையில் கையாளப்படுகின்றன. படப்பதிப்புகள் இவ்வாறு பல்வேறு முறைகளில் அமைக்கப்பட்டாலும் இப்பதிப்புகள் கோக்கப்பட்ட செய்திகளின் அகல, உயரத்திற்கேற்பப் பக்க அமைப்பிற்குப் பொருத்தமாக அமைக்கப்படும். தேவையான அடிக்குறிப்பு விளக்கத்துடன் படங்கள் பதிப்பிக்கப்படுகின்றன.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 5.6 அச்சிடுதலில் நவீனப் போக்குகள்

அச்சுப் பொறிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு அச்சு எழுத்துகளின் மேல் மையைத் தடவிச் சுற்றிலும் மரத்தாலான சட்டங்கள் வைத்து முடுக்கி, காகிதத்தையோ அல்லது துணியையோ அதன்மேல் வைத்து அழுத்தி எடுத்து அச்சுப் பதித்தனர்.

சில காலத்திற்குப்பின் எரல் ஸ்டான் ஹோப் (Earl Stan Hope) என்பவர் இரும்புச் சட்டங்களைப் பயன்படுத்தி ஓர் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இதற்குப்பின், 1813இல் ஜார்ஜ் கிளைமெக்ஸ் (George Clymex) என்ற ஆங்கிலேயர் கொலம்பியன் பிரஸ் (Columbian Press) என்ற இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். 1814இல் ஹோப்கின்சன் ஹோப் (Hopkinson Hope) என்பவர் ஆல்பியன் பிரஸ் (Albian Press) என்னும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். நாளடைவில் காலால் மிதித்து அச்சடிக்கும் டிரெடில் பிரஸ் (Treadle Press) என்னும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்பு அறிவியல் முன்னேற்றம் வளர வளர நவீன அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அச்சுக்கலை நவீனமயமாகி வருகின்றது.



Columbian Press



Albian Press



Treadle Press

### 5.6.1 அச்சடிக்கும் இயந்திரங்கள்

இக்காலத்தில் அச்சடிக்கப் பயன்படும் இயந்திரங்களை நான்கு பிரிவுகளில் அடக்கலாம். அவை:

1) காலால் மிதித்து அச்சடிக்கும் இயந்திரம் (Treadle of Platers machine)

2) உருளை அச்சு இயந்திரம் (Cylinder machine)

3) சுழல் அச்சுப்பொறி இயந்திரம் (Rotary machine)

4) எதிரீட்டு அச்சிடும் இயந்திரம் (Offset Printing machine)

என்பனவாகும்.

இந்தியாவில் புதுதில்லி, மும்பை, அமிர்தசரஸ், பரிதாபாத், சென்னை, பெங்களூர் போன்ற இடங்களில் அச்சு இயந்திரங்கள் உருவாக்கப்படுகின்றன

- **காலால் மிதித்து அச்சடிக்கும் இயந்திரம்**

காலால் மிதித்து அச்சடிக்கும் இயந்திரங்கள் தொடக்கக் காலங்களில் காலால் மிதிக்கப்பட்டு இயக்கப்பட்டன. மின்வசதி இல்லாத இடங்களில் இத்தகைய அச்சு இயந்திரங்களே பயன்படுத்தப்படுவதற்கு ஏற்றனவாக இருந்தன. மின்வசதி பெற்ற ஊர்களில் பின்னர், காலால் மிதித்து இயக்குவதற்குப் பதிலாக மின்சாரத்தால் அவை இயக்கப்பட்டன. இவ்வகை ‘டிரெடில்’ இயந்திரங்கள் மேலும் இரண்டு பிரிவுகளில் உருவாக்கப்பட்டன. அவை:

1) சிறிய வேலைகளுக்குப் பயன்படும் இயந்திரம் (Light Platten)

2) பெரிய வேலைகளுக்குப் பயன்படும் இயந்திரம் (Heavy Platten)

என்பனவாகும்.

- **சிறிய வேலைகளுக்குப் பயன்படும் இயந்திரம்**

சிறிய வேலைகளுக்குப் பயன்படும் இயந்திரத்தைக் கொண்டு சாதாரண வேலைகளைச் செய்யலாம். சிறிய வாணிகம் தொடர்பான வேலைகளையும் செய்யலாம். இந்த இயந்திரத்தின் மேல்பாகத்தில் மை வைக்கும் தட்டுப் போன்ற வட்ட அமைப்பு உள்ளது. அது சிறுகச் சிறுகச் சுழன்று நகர்ந்து மையைப் பரவச் செய்து ஒரே சீராக அச்சடிக்க உதவும்.

- **பெரிய வேலைகளுக்குப் பயன்படும் இயந்திரம்**

பெரிய வேலைகளுக்குப் பயன்படும் இயந்திரத்தைக் கொண்டு பெரிய வேலைகளை எளிதாகச் செய்ய முடியும். இந்த இயந்திரம் பெரிய அளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வியந்திரத்தில் தாள் வைக்கும் பாகம் (Bed) அசையாது இருக்கும். எழுத்துக்கள் வைக்கப்பட்டிருக்கும் பாகம் மட்டும் அசைந்து தாளில் பதியும். இன்றைய அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாகத் தற்போது, தானே தாள் எடுத்துத்

தானாகவே அச்சடிக்கும் இயந்திரங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

காலால் இயங்கும் இந்த இயந்திரம் முழுத்தாள் (Fools cap), கிரௌன் (Crown Folio), டெம்மி (Demy Folio), ராயல் (Royal Folio) என்னும் பல அளவுகளில் கிடைக்கின்றன.

• உருளை அச்சு இயந்திரம்

உருளை அச்சு இயந்திரம் புத்தக வேலைகளைச் செய்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றது. இவ்வகை இயந்திரங்கள் மூன்று வகைகளில் பகுக்கப்படுகின்றன. அவை:

1) நின்று சுழலும் அச்சு இயந்திரம் (Stop Cylinder)

2)ஒற்றைச் சுற்று இயந்திரம் (Single Revolution Cylinder)

3) இரட்டைச் சுற்று இயந்திரம் (Two Revolution Cylinder)

என்பனவாகும். இவ்வகை இயந்திரங்களின் மூலம் ஒரே நேரத்தில் குறைந்தது எட்டுப் பக்கங்கள் வரை அச்சிடலாம்.



Cylinder Platten Machine

• எதிரீட்டு (ஆப்செட்) அச்சிடும் இயந்திரம்

அமெரிக்காவைச் சேர்ந்த சிக்காகோ நகரில் அச்சடிப்பாளன் அச்சடித்துக் கொண்டிருந்தபோது காகிதத்தின் மீது விழவேண்டிய அச்சுப்பதிவு எதிர்பாராத விதமாக அங்கிருந்த ரப்பர் போன்ற பொருளின் மீது விழுந்தது. அதன் மூலம் ‘ஆப்செட்’ இயந்திரம் கண்டுபிடிக்க வழிபிறந்தது.

ஆப்செட் அச்சிடும் இயந்திரம் தற்கால நவீன அமைப்பு முறைகளில் ஒன்றாகும். இந்த இயந்திரத்தில் அச்சு உலோகப் படிவத்திலிருந்து (metal Plates) மெதுவாக ரப்பர் தகட்டிலும் (Rubber blankets) அதிலிருந்து காகிதத்தின் மீதும் படிகள் எடுக்கப்படுகின்றன. இம்முறைக்கு ஆப்செட் அச்சிடும் முறை என்று பெயர்.



Offset Printing machine

### 5.6.2 எழுத்தச்சுப் படமுறை (Lithography)

இன்றைய அறிவியல் உலகில் பல்வேறு வண்ணங்களில் அச்சிடுவதற்கு எழுத்தச்சுப்பட முறை அல்லது லித்தோகிராபி முறை பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. பக்கங்களைப் படமாக்கி அச்சிடும் (Photo print) முறையும் இப்போது வழக்கில் உள்ளது.

இந்த முறை பட உருவத்தைச் சிறிதாக்கவோ பெரிதாக்கவோ கூடிய கருவிமுறையைக் கொண்டதாகும். இதில் கரிமச் சுண்ணாம்புக் கல்லில் கொழுப்பு அல்லது ஒருவகையான பசை தடவப்படும். பின்னர் இச்சுண்ணாம்புக்கல் தண்ணீரை இழுத்துக் கொள்ளும்படி செய்யப்படும். அடுத்து ஒரு கொழுப்புப் பசைக்கும் மற்றொரு கொழுப்புப் பசைக்கும் தொடர்பு உண்டாக்கப்பட்டு அவை நீருக்கு எதிரான குணத்தைக் கொள்ளும்படி செய்யப்படுகிறது. இம்முறையில் இயந்திரத்தில் இருபுறமும் இயங்கக் கூடிய படுக்கை ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். இப்படுக்கைக் கல்லின் கனத்திற்கு ஏற்றபடி உயர்த்தக் கூடியதாகவோ தாழ்த்தக் கூடியதாகவோ அமைக்கப்பட்டு, அச்சடிக்க உதவும் வகையில் இருக்கும். இந்த இயந்திரத்தில் இரண்டு உருளைகள் உள்ளன. ஓர் உருளை மையைக் கல்லின் மீது தடவும்; மற்றொரு கனமான உருளை அழுத்தம் உண்டாக்கும். ஓர் இரும்புப் பலகை உருளைகளுக்குத் தேவையான மையைத் தரும். இரண்டாவது உருளை அச்சடித்த தாளை வெளியே எடுத்து வரும். இக்காலத்தில் கல்லிற்குப் பதில் அலுமினியம் அல்லது துத்தநாகத்தகடு பயன்படுத்தப்படுகின்றது. இம்முறையே புகைப்பட எழுத்தச்சுப் படிவ முறையில் (Photo Offset) பயன்படுகின்றது.

புகைப்பட எழுத்தச்சுப் படிம முறையானது புகைப்பட நெகடிவை, கல்லில் மிதித்துத் தட்டையான அச்சுப் பொறியால் அச்சடிக்கும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

### 5.6.3 டெலிடைப் செட்டர் (Teletype setter)

டெலிடைப் செட்டர் முறையை, தானாகவே அச்சுக் கோக்கும் முறை என்று கூறலாம். இது தனியச்சு முறையில் அச்சுக் கோப்பது போன்றே செயல்படும். தனியச்சு முறையில் உள்ள பொத்தான் அமைப்பு இதிலும் காணப்படும். இம்முறையில் சூடான உலோகக் கலவை மூலம் எழுத்துக்கள் தயாரிக்கப்படும். ஆனால் இதில் முதலில் துளைசெய்யப்பட்ட
சுருள் வெளிவரும். பின்னர் இச்சுருள் அச்செழுத்துகள் தயாரிக்கப் பயன்படும்.

இச்சுருளில் உள்ள குறியீடுகள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குத் தந்திமுறை போன்று அனுப்பப்படவும் முடியும். ஓரிடத்தில் அச்சுக் கோக்கப்பட்டு, அதுவே மற்றோர் இடத்திற்கு அனுப்பப்படும் சாத்தியக் கூறு இருப்பதால் ஒரே நேரத்தில் பல இடங்களிலிருந்து பத்திரிகை வெளிவரும்படி செய்ய வாய்ப்புள்ளது. 1934இல் பிரிட்டனில் இம்முறை கண்டுபிடிக்கப்பட்டது.

### 5.6.4 கணினி அச்சு அமைப்பு

மனிதனால் உருவாக்கப்படும் எழுத்துக்கள் கணினியால் உருவாக்கப்படும் நிலையாக இன்று வளர்ச்சி அடைந்துள்ளது. அச்சுக் கோக்கப்படுவதற்கு மட்டுமன்றி, அச்சிடுவதற்கும் கணினி முறை பயன்படுகின்ற நிலை இப்பொழுது வளர்ந்துள்ளது. மேலை நாட்டுச் செய்தித்தாள்கள் பல இத்தகைய முறையில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றன. டி.டி.பி. (D.T.P. – Desk Top Publishing) எனப்படும் இம்முறை கணினி வைத்திருப்போர்க்குப் பெரிய கொடையாகும். மிகக் குறைந்த நேரத்தில் அதிக அளவுள்ள பக்கங்களையுடைய செய்திகளை இதனால் அச்சுக் கோக்க முடியும். அதிக அளவிலான படிகள் இம்முறையால் அச்சடிக்கப்படுகின்றன. பக்கங்களின் அமைப்பு முறையும் (Lay out) அழகும் படிப்போரை வெகுவாக ஈர்க்கும். கணினியின் வளர்ச்சி நிலையாக வி.டி.யூ. எனப்படும் 'விஷுவல் டிஸ்பிளே யூனிட்' (V.D.U – Visual Display Unit) என்பது அச்சுக் கோக்கும் பணியையும் பக்க ஒருங்கிணைப்பையும் ஒருசேர மேற்கொள்கிறது. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும் வி.டி.யூ. கருவிகளும் இப்பொழுது நடைமுறையில் உள்ளன.



Desk Top Publishing

### 5.6.5 டெலிவியூ (Teleview)

டெலிவியூ முறையில் ஒரு செய்தித்தாளின் அனைத்துப் பக்கங்களும் உருவாக்கப்பட்டுச் செயற்கைக்கோளுக்கு அனுப்பப்படுகின்றன. பின்னர் அங்கிருந்து செய்தித்தாளின் பிற கிளை அலுவலகங்களுக்குப் படஅச்சுப் படிவமாக (Fascimile) அனுப்பப்படுகின்றன. இத்தகைய முறையில் ஜப்பானில் உள்ள 'அஷகி ஷிம்புன்' (Asahi Shimbun) என்ற செய்தித்தாளும் ரஷ்யாவில் உள்ள 'ப்ராவ்தா'வும் அச்சடிக்கப் படுகின்றன.

'அஷகி ஷிம்புன்' செய்தித்தாள் புதிய முறையைப் பின்பற்றியது. செயற்கைக்கோள் மூலம் செய்தித்தாள் நிறுவனங்களுக்குப் பக்கங்களை அனுப்புவதற்குப் பதிலாக, வீடுகளில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கே நேரடியாகச் செய்திகள் பத்திரிகை வடிவில் அனுப்பப்படுகின்றன. வீடுகளில் உள்ள மக்கள் தங்கள்

தொலைக்காட்சிப் பெட்டிகளிலேயே செய்தித்தாளின் பிம்பத்தைப் பார்த்துச் செய்திகளைப் படித்துக்கொள்வர்.

## 5.7 அச்சிடுவதற்குப் பயன்படும் எழுத்துக்கள்

அச்சிடுவதற்குப் பல முறைகள் உள்ளதால் அவற்றில் பயன்படுத்தப்படும் பல வகையான எழுத்துகளும் வழக்கத்தில் உள்ளன. அத்தகைய வேறுபட்ட எழுத்துகளின் வகைகள் பற்றியும் இங்கு விளக்கப்படுகிறது.

### 5.7.1 அச்சு எழுத்து (Type)

ஓர் அச்சு எழுத்தை உருவாக்க அச்சுத் துளையீடு வேண்டும். எஃகினாலான இத்தகைய கருவியைக் கொண்டு பித்தளை அல்லது செம்பில் அழுத்தி அச்சுக்கரு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு எழுத்துக்கும் ஓர் அச்சுக்கரு தேவை. இதனைக் கொண்டு அழுத்தி அச்சு எழுத்து உருவாக்கப்பட்டது. இது பழைய முறை. இந்த முறை காலப்போக்கில் மாறியது. இப்போது உருக்கு இரும்பில் அச்சுத் துளைப்பானால் துண்டு வெட்டப்பட்டு, காய்ச்சி, தண்ணீர் தோய்த்து மென்மைப்படுத்தப்படுகிறது. பிறகு அளவி மூலமும் எழுத்துருவத்தின் முகப்பு குறிக்கப்படும். அடுத்து எழுத்தின் உட்புறப் பகுதியை மாற்றுத் துளைப்பான் மூலம் அடித்து அழுத்தப்படுகின்றது.

ஓர் எழுத்தின் தேவையற்ற பகுதிகள் அரத்தினால் அராவி விடப்படுகின்றன. எல்லா எழுத்துக்களின் கோடும் (Lines) எழுத்துக்களின் முடிவிலுள்ள முடிக்கப்பட்ட குறுகிய பகுதியும் (Short) ஒரே அளவினதாகச் செய்யப்படும்.



- அச்செழுத்துக்களின் வகைகள்

அச்செழுத்துக்கள் பல குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திலும் சிறியது (small), பெரியது (Large), நடுத்தரம் (Medium) என்று எழுத்துக்கள் உள்ளன. ரோமன் (Roman), இத்தாலிக் (Italic), கோதிக் (Gothic) என்ற எழுத்துக்கள் உள்ளன. இவை தவிர நெருக்கிய எழுத்துக்கள் (Condensed), பெரிதான எழுத்துக்கள் (Bold), விரிந்த எழுத்துக்கள் (Extended), நிழலுள்ள எழுத்துக்கள் (Shaded), வரிக்கோட்டு எழுத்துக்கள் (Outline), கையெழுத்து வடிவத் துகள் என்றும் பல வகை அச்செழுத்துகள் உள்ளன.

### 5.7.2 புள்ளி முறை (Point System)

அச்சு எழுத்துக்கள் தொடக்கக் காலத்தில் ஒரே மாதிரியான அளவினதாக செய்யப்படவில்லை. விருப்பம் போல் வெவ்வேறு அளவினதாக செய்யப்பட்டன.

1937இல் பௌர்ணியர் என்பவர் புதிய அளவில் அச்சு எழுத்துகளை வார்க்கத் தொடங்கினார். இந்த அளவிற்கு பைகா (Pica) என்று பெயர். பைகாவை அடிப்படையாகக் கொண்டு அதை 12 பாகங்களாகப் பிரித்தார். ஒவ்வொரு சிறு பகுதியையும் புள்ளி (Point) என்று அழைத்தார். இம்முறை 1898 வரை பழக்கத்தில் இருந்தது. 1898க்குப் பிறகு அமெரிக்கர்கள் புள்ளி முறையைக் கொண்டு வந்தனர். இதற்கு அமெரிக்கப் பைகா (12 புள்ளி) என்று பெயர். ஓர் அங்குலத்தில் 72 புள்ளிகள் இருக்கும்



## 5.8 தொகுப்புரை

முற்காலத்தில் அச்சுக்கலை சமயம் பரப்பவே ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்டது. அச்சுக்கலை முதன்முதலில் சீனாவில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. தகடு, செம்பு, கல்வெட்டு, மர எழுத்து, நெசவுத் துணி போல்வன அச்சுக்கலை வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட பல்வேறு பொருள்கள் ஆகும். அச்சுக்கலை வளர்ச்சியில் ‘காகித நாணயம்’ ஒரு முக்கியமான தூண்டுகோலாக அமைந்தது. வழிபாட்டுப் படங்கள் அச்சடிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மண்ணால் ஆன எழுத்துகளைத் தீயிலிட்டுச் சுட்டுப் பயன்படுத்தினர். மரத்தாலான தனித்தனி எழுத்துக்கள், உலோக எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலை அச்சிடுதலின் முக்கிய வளர்ச்சி நிலையாகும். ஜான் கூட்டன் பர்க் அச்சுக்கலையின் தந்தை என்றழைக்கப்படுகிறார். தமிழ் வரிவடிவங்களில் பல மாறுதல்களைச் செய்ததால் வீரமாமுனிவர் தமிழ் வரிவடிவின் தந்தை என்று அழைக்கப்பட்டார். இந்தியாவில் கோவா, தமிழ்நாட்டில் தரங்கம்பாடி ஆகிய ஊர்கள் அச்சுக்கூடம் முதலில் நிறுவப்பட்ட இடங்கள் ஆகும். அச்சிடுவதில் காலால் மிதித்து அச்சடிக்கும் இயந்திரம், உருளை அச்சு இயந்திரம், சுழல் அச்சு இயந்திரம், ஆப்செட் அச்சிடும் இயந்திரம் போன்ற இயந்திரங்கள் பயன்பட்டு வந்தன. டெலி டைப் செட்டர், டெலக்ஸ், போட்டோ டைப் செட்டிங் போன்ற முறைகளும் தற்கால அச்சிடும் முறைகளாக உள்ளன. கணினி கண்டுபிடிப்பு அச்சிடும் முறையில் அதிநவீன வசதிகளை உருவாக்கியுள்ளது. பக்க அமைப்பு, அழகூட்டுதல், அச்சிட்டு மடித்து எண்ணி அடுக்குதல் போன்ற பல்வேறு பணிகளைக் கணினியின் துணைகொண்டு செய்ய முடிகிறது. அச்சிடுவதற்குப் பயன்படுத்தக் கூடிய எழுத்துக்களில் பல வகைகள் உள்ளமையும் புதிய முறைகளில் அச்சிட உதவி வருகின்றன.

### தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் 6

# P20446 - இயந்திரப் பிரிவு

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

செய்தித்தாள்களில் இயந்திரப் பிரிவு மிகவும் வேகமாக இயங்க வேண்டும். இயந்திரப் பிரிவில் ஐந்து பிரிவுகள் இயங்கி வருகின்றன. அவற்றின் பணி இப் பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஒரு நாளிதழின் அனைத்துப் பிரிவுகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் நாளிதழ்
தரமாக வெளிவர முடியும் என்பதை இப்பகுதி விளக்குகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

இந்தப் பாடத்தை படித்து முடிக்கும்போது நீங்கள் கீழ்க்காணும் திறன்களையும் பயன்களையும் பெறலாம்.

- ஒரு நாளிதழின் இயந்திரப் பிரிவு என்னென்ன பணிகளைச் செய்கின்றது என்பதைத் தெளியலாம்.

- பெரிய நாளிதழ்களில் தானாகவே அச்சுக் கோக்கின்ற இயந்திரங்கள் உள்ளதையும் சிறிய நாளிதழ்களில் வேறு முறைகளில் அச்சுக் கோப்பதையும் அறிந்து கொள்ளலாம்.

- கையினால் அச்சுக் கோத்தல், தனி எழுத்து (மோனோ) அச்சுவார்ப்பு முறை, தொடர் எழுத்து (லைனோ) அச்சுவார்ப்பு முறை என்று மூன்று முறைகள் அச்சுக் கோக்கும் பிரிவில் உள்ளதை அறியலாம்.

- பெரிய இதழ்கள் அச்சுக் கட்டைகளைச் செதுக்குவதற்காகத் தனித்துறையினை வைத்துள்ளன. ஆனால் சிறிய இதழ்கள் அச்சுக் கட்டைகளைக் கூலி கொடுத்துச் செய்து வாங்குகின்றன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

- அச்சடிக்கும் முறைகளில் இன்று ஆப்செட் முறையே அதிக அளவில் நாளிதழ்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. விரைவாகவும், குறிப்பிட்ட நேரத்தில் தேவையான படிகளை அச்சடிக்கவும் இது மிகவும் உதவியாக உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

- நாளிதழ்களில் அச்சுப்படி திருத்தும் பணி மிகவும் இன்றியமையாதது. நாளிதழ்கள் தரமாக வெளிவர வேண்டுமானால் அச்சுப்படி திருத்துவோர் மிகவும் கவனமாகப் பணிபுரிய வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

6.0 பாட முன்னுரை
6.1 இயந்திரப் பிரிவு
தன் மதிப்பீடு : வினாக்கள்- I
6.2 பிற பிரிவுகள்
6.3 தொகுப்புரை
தன் மதிப்பீடு : வினாக்கள்- II

# 6.0 பாட முன்னுரை

செய்தித்தாளின் தொழில் நுட்பத் துறையாக இயந்திரப் பிரிவு செயல்படுகின்றது. அச்சுக்கோப்பு, அச்சுப்பதிவு, அச்சுப்படிகள் தயாரிப்பு, அச்சுப்படி திருத்தம் ஆகிய பணிக் இப்பிரிவில் நடைபெறுகின்றன. தலைமை அச்சுப்பணி மேற்பார்வையாளர் ஒருவர் இப்பணிகளை மேற்பார்வையிடுவார். இப்பிரிவில் மனிதர்கள் இயந்திரங்களுடன் சேர்ந்து வேகமாகச் செய்தித்தாள்களை உருவாக்குகின்றனர். இதிலுள்ள நான்கு பிரிவுகளில் பணியாற்றுகின்றவர்களின் கூட்டு முயற்சியில்தான் தரமான இதழ்கள் உருவாகின்றன. ஒவ்வொரு பகுதியும் மற்ற பகுதிகளுடைய பணிகளையும் முறைகளையும் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

பொதுவாக ஒரு செய்தித்தாளின் அலுவலகம் நிருவாகப் பிரிவு (Administrative Section), ஆசிரியர் குழு (Editorial Section), வணிகப் பகுதி (Business Section), இயந்திரப் பிரிவு (Mechanical Section) என்று நான்கு பகுதிகளாகப் பகுக்கப்படும். இவற்றுள் இயந்திரப் பிரிவு மட்டும் இப்பாடத்தில் விளக்கப்படுகின்றது.

## 6.1 இயந்திரப் பிரிவு

பெரிய செய்தித்தாள் அலுவலகங்களில் பொதுவாக ஐந்து பிரிவுகள் இயந்திரப் பிரிவில் இயங்குகின்றன. அவை:

1) அச்சுக் கோக்கும் பிரிவு (Composing Section)

2) அச்சு வார்ப்புப் பிரிவு (Typing/Casting Section)

3) படங்களைச் செதுக்கும் பிரிவு (Engraving Section)

4) அச்சடிக்கும் பிரிவு (Printing Section)

5) அச்சுப்படி திருத்தும் பிரிவு (Proof Reading Section)

என்பனவாகும்.

### 6.1.1 அச்சுக் கோக்கும் பிரிவு

ஆசிரியர்ப் பகுதியிலிருந்து அச்சிட்டு எழுதப்பட்டு வருகின்ற எல்லாவற்றையும் இந்தப் பிரிவில் அச்சுக் கோப்பார்கள். எந்த வகை அச்செழுத்துக்களில் அச்சடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தால் அதன்படியே அச்சுக் கோப்பார்கள். பெரிய நாளிதழ்களில் தானே அச்சுக் கோக்கின்ற இயந்திரங்களும் பயன்பாட்டில் இருக்கின்றன.

இப்பிரிவில் ஒரு கண்காணிப்பாளர் தலைமைப் பொறுப்பில் இருப்பார். அவருக்குக் கீழ், தட்டச்சில் நன்கு தேர்ச்சி பெற்ற உதவியாளர்கள் பணிபுரிவர். செய்திப் பிரிவில் இருந்து வரும் செய்திகள், கட்டுரைகள் போன்றவை அச்சுக் கோப்புப் பிரிவின் கண்காணிப்பாளர் மேஜைக்கு வந்து சேரும். அவர் அவற்றைத் தமது மேற்பார்வையில் தக்கபடி அச்சுக் கோப்பதற்கு ஏற்பாடு செய்வார். அச்சுக் கோத்த செய்திகளைப் படியெடுத்துப் பிழை திருத்துவதற்காக அப் படிகளைச் செய்தியாளர் பிரிவுக்கு அனுப்பி வைப்பார். பிழைதிருத்தம் செய்து வந்ததும் அதிலுள்ள திருத்தங்களுக்கும் மாற்றங்களுக்கும் ஏற்ப மீண்டும் அச்சுக் கோப்பில் திருத்தும் பணி தொடரும்.

இப்பிரிவில் அச்சு எழுத்துக்கள் இருக்கும். சில அச்சுப் பிரிவில் அவ்வப்போது அச்செழுத்துகளைப் புதிதாக வார்த்துத் தனி எழுத்தாக அச்சுக் கோக்கும் வசதியும் இருக்கும். அவற்றைக் கொண்டு அச்சுக் கோப்பது மூன்று வகைகளாக அமையும்.

- கையால் அச்சுக் கோத்தல்

‘கேஸ்’ (Case) என்று அழைக்கப்படும் அச்செழுத்துப் பெட்டியில் தனித்தனியாக இருக்கும் எழுத்துகளை அச்சுக் கோப்பவர் ஒவ்வொன்றாக எடுத்துக் கையால் பிடித்துள்ள ‘ஸ்டிக்’ (Stick) என்னும் அச்சடுக்கிச் சட்டத்தில் வார்த்தைகள் உருவாகுமாறு வரிசையாக அடுக்குவார். இம்முறை இன்றும் சிறு பத்திரிகைகளில் பின்பற்றப்படுகிறது.

### 6.1.2 அச்சு வார்ப்புமுறை

தனி எழுத்து (மோனோ) அச்சுவார்ப்புமுறை, தொடர் எழுத்து (லைனோ) அச்சுவார்ப்பு முறை என அச்சுவார்ப்பு முறை இருவகைப்படும்.

- தனி எழுத்து (மோனோ) அச்சுவார்ப்பு முறை

தனியெழுத்து அச்சு வார்ப்பு முறை இயந்திரங்களில் ஒவ்வொரு எழுத்தாகப் புத்தம் புதியனவாக வார்த்து உருவாகி அச்சுக் கோக்கப்படுகிறது. தனியெழுத்து அச்சு இயந்திரங்களில், தட்டச்சாளர் செய்திகளைத் தட்டச்சு செய்வார். அது முதலில் ஒரு நீண்ட தாள்சுருளில் புள்ளித் துவாரக் குறியீடாகப் (Punching Codes) பதிக்கும். அந்தப் பதிவுசெய்த தாள்சுருள் திரும்பச் சுழற்றப்பட்டு (Rewind) அச்சுவார்க்கும் இயந்திரத்தில் பொருத்தப்படும். அதில் பதிவாகியிருக்கும் குறியீடுகளுக்கு ஏற்ப அந்த இயந்திரம் தனித்தனி எழுத்தை வார்த்தெடுத்து அடுக்கும். அந்த இயந்திரத்தின் கொதிகலத்தில் உருகும் ஈயத்திலிருந்து எழுத்துக்கள் ஒவ்வொன்றாக உருவாகும். தனித்தனி எழுத்துகளும் இடநிரப்பிகளும் இணைந்து ஒவ்வொரு பத்தியாக அச்சுக் கோக்கும். இது ஒரு தொகுப்பாளரால் படியெடுக்கப்படும். படியினைப் பிழைதிருத்தம் செய்தபிறகு, தவறான எழுத்துகளை மாற்றியமைக்க இவ்வியந்திரத்தில் வசதியுண்டு.



- தொடர் எழுத்து (லைனோ) அச்சுவார்ப்பு முறை

தொடர் எழுத்து அச்சு வார்ப்பு முறை இயந்திரத்தில் செய்திகளைத் தட்டச்சு செய்யும் போது அச்செழுத்துகள் வரிவரியாக வெளிவரும். தட்டச்சுக் கருவியும் அச்சுக்களை வார்க்கும் கருவியும் இணைந்த இயந்திரமாக இது இருக்கும். ஆதலால் தட்டச்சு செய்கிற போதே ஈயம் உருகி, எழுத்துக்கள் ஒரு பத்தி அகலத்தில் வரிவரியாக உருவாகும். சூடாக இருக்கும் அந்த அச்சுக்கட்டை வரிகளில் தண்ணீர் பீச்சியடிக்கப்படும். அப்போது எழுத்துக்கள் குளிர்ந்து வரிவரியாக அடுக்கப்படும். இதில் ஒரு வரியில் ஓர் எழுத்து மட்டும் பிழையானாலும் அந்த வரியையே புதிதாக மாற்ற வேண்டி வரும். விரைந்து அச்சுக் கோப்பதற்கு இந்த இயந்திரம் உதவியாக இருந்தாலும் இவ்வகை இயந்திரங்களுக்குத் தற்போது, இம்முறையைப் பயன்படுத்தி வந்த எல்லா இந்தியப் பத்திரிகைகளுமே விடைகொடுத்து அனுப்பிவிட்டன. காரணம், இதைவிட எளிய டைப்செட்டிங் முறை கணினியின் உதவியால் கிடைக்கப் பெற்றதேயாகும்.



### 6.1.3 போட்டோ டைப் செட்டிங் முறை

கணினி உதவியுடன் தற்போது போட்டோ டைப் செட்டிங் முறையில் அச்செழுத்துகள் கோக்கப்படுகின்றன. எல்லாப் பத்திரிகைகளும் இவ்வகை அச்சுக் கோக்கும் முறையையே தற்போது பயன்படுத்துகின்றன. இம்முறையால் அச்சுக்களை உருவாக்கும் ஈயத்திற்கு வேலையே இல்லாமல் போய்விட்டது. போட்டோ டைப் செட்டிங் முறையில் விரைவும் நேர்த்தியும் ஏற்படுகின்றன. இம்முறையில் கிடைக்கும் நேர்த்தியைப் பிற அச்சுக் கோக்கும் முறையில் காண இயலாது. அச்சுக் கோப்பிற்குப் பின்னர், செய்திகளின் படிகள் ‘புரோமைடு’ தாளில் பதிவு செய்யப்பட்டுப் பிழைதிருத்தம் செய்ய அனுப்பப்படுகின்றன.

### 6.1.4 அச்சு வார்ப்புப் பிரிவு

அச்சுக் கோத்தவற்றைப் பக்க அமைப்புச் செய்து அதை மிக விரைந்து அச்சடிக்கும் சுழல் அச்சு (Rotary) இயந்திரங்களில் பொருத்துவதைத் தனிப் பகுதியினர் கவனிக்கின்றனர். பக்க அமைப்பு முடிவுற்றவுடன் பக்கங்களின் மீது ‘மேட்’ எனப்படும் வளையும் தன்மையுடைய ஒருவகை ரப்பர் கட்டையை வைத்து அழுத்தி, எழுத்துக்கள் மற்றும் படங்கள் முதலிய பிற பதிவுகளை அதில் படியச் செய்வார்கள். பின்பு அதை அரை உருளை வடிவத்தில் வளைத்து, ஓர் உருளையோடு பொருத்துவர். இதில் ஒவ்வொரு பக்கத்திற்கும் தனித்தனியே அச்சுவார்ப்புகளை உருவாக்குவர். இவ்வச்சு வார்ப்புகளைக் கடைசல் இயந்திரங்களில் பொருத்தி, பிசிறு நீக்கிச் சுழல் அச்சு இயந்திரத்தில் பொருத்தும் அளவிற்குச் செப்பம் செய்வர்.

### தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 6.2 பிற பிரிவுகள்

மேற்குறிப்பிட்டவைகளைத் தவிர, படக்கட்டை செய்யும் பிரிவு, அச்சடிக்கும் பிரிவு, அச்சுப் படிதிருத்தும் பிரிவு எனவும் பிரிவுகள் உள்ளன.

### 6.2.1 படக்கட்டை செய்யும் பிரிவு

புகைப்படங்களையும் வரைந்த ஓவியங்களையும் பெரிதாகவோ சிறிதாகவோ செய்தித்தாளில் அச்சிட வேண்டுமானால் அவற்றை வைத்து அச்சுக் கட்டைகள் (Block) தயாரிக்க வேண்டும். சிறிய இதழ்கள் இத்தகைய கட்டைகளைக் கூலி கொடுத்துச் செய்து வாங்கும். பெரிய இதழ்கள் படக் கட்டைகளைச் செய்வதற்காகத் தனித்துறையினை வைத்திருக்கின்றன. வெள்ளை-கருப்பு மற்றும் வண்ணங்களை அவற்றின் நிற வேறுபாடுகளுக்கு ஏற்பத் தனித்தனி உலோகத் தகடுகளில் உருவாக்கித் தருவதே இப்பிரிவில் நடைபெறும் பணியாகும்.

இந்த முறை இப்போது ஓரங்கட்டப்பட்டுவிட்டது. தற்போது எந்தச் செய்தி அலுவலகங்களிலும் படங்களை ‘பிளாக்’ (Block) எடுத்து அச்சடிப்பது வழக்கமில்லை. படங்களை ‘ஸ்கேன்’ செய்து கணினியில் மெருகூட்டி, அதிலிருந்து பிலிம் எடுத்து ஆப்செட் இயந்திரத்தில் அச்சடிப்பதே பெரும்பாலும் எல்லாச் செய்தி அலுவலகங்களிலும் அச்சடிக்கும் வழக்கமாக மாறிவிட்டது. இதில் மற்ற முறைகளைக் காட்டிலும் விரைவாகவும் நேர்த்தியாகவும் அச்சடிக்க முடியும்.

பல இலட்சங்களை மூலதனமாகப் போட்டு நிறுவிய சுழல் அச்சு இயந்திரத்தை மூலையில் போட முடியாமல் அதன் பயன்பாட்டு வசதியால் இன்றும் அதைப் பயன்படுத்தி வருகின்ற செய்தி அலுவலங்களும் நம்நாட்டில் தற்போதும் உண்டு என்பதும் உண்மையாகும்.

### 6.2.2 அச்சடிக்கும் பிரிவு

சுழல் அச்சு இயந்திரங்கள் வியக்கத்தக்க முறையில் செய்தித்தாள்களை அச்சடிக்கின்றன. அச்சடிப்பது மட்டுமின்றி, அச்சிட்ட இதழ்களை வெட்டி, மடக்கிக் கணக்கிட்டுக் கட்டுவது வரை அந்த இயந்திரமே செய்துவிடுகின்றது.

அச்சடிக்கும் பிரிவு ஒரு கண்காணிப்பாளரைத் தலைவராகக் கொண்டு செயல்படும். அங்குப் பக்க வடிவமைக்கப்பட்ட செய்தித்தாள் மீது ஒரு குறிப்பிட்ட அட்டை (Flong) ஒன்றை வைத்து ஓர் இயந்திரத்திற்குள் அனுப்புவர். இதன் மீது அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டதும், ஈய எழுத்துக்கள் அவ்வட்டையில் பதியும். அசல் செய்தித்தாளின் மறுபிரதி போல அந்த ஈயத் தகடு காணப்படும். அத் தகட்டை அச்சடிக்கும் சுழல் அச்சு (ரோட்டரி) இயந்திரத்தில் பொருத்தமான இடத்தில் பதித்து விடுவார்கள். இவ்வியந்திரத்தின் ஒரு மூலையில் பொருத்தப்பட்டு இருக்கும் செய்திக் காகித உருளையிலிருந்து காகிதம் அச்சுக்களின் மீது விழுந்து செல்வதுபோல் அமைக்கப்பட்டிருக்கும். இயந்திரம் இயக்கப்பட்டவுடன் பெரிய சத்தத்துடன் ஓடி அச்சுக்களைப் பதிக்கத் தொடங்கும். அச்சுத் தகட்டில் மை ஒரே சீராகப் பரவும். அச்சடிக்கப்பட்ட முழுப் பத்திரிகைகள் அழகாக மடிக்கப்பட்டு, இயந்திரத்தின் மற்றொரு மூலையில் விழும். அது மட்டுமின்றி, அவற்றை 50, 50 படிகளாக ஒழுங்காக அடுக்கியும் கொடுத்துவிடும். அவற்றை உரிய பகுதிகளுக்கு அனுப்ப வேண்டியதுதான்

பணியாளர்களின் வேலை.

ஆப்செட் அச்சடிப்பு முறையினால் சுழல் அச்சு முறையைவிடப் பல்வேறு நன்மைகள் இருப்பதால்தான் இன்று அனேகப் பத்திரிகைகள் இம்முறையை ஏற்றுக் கொண்டுள்ளன. பத்திரிகையின் முழுப் பக்கங்கள் புகைப்பட முறையில் படம் எடுக்கப்பட்ட ஒரு தகட்டின் மீது அதன் நகல் விழும்படி செய்யப்படுகிறது. உரிய வேதியியல் மாற்றங்களுக்குப் பின்னர் அத்தகட்டில் செய்தித்தாளின் முழு உருவமும் பதிந்து அச்சடிக்கத் தயாராகிவிடும். ஆப்செட் இயந்திரத்தில் அத் தகட்டை உருளை வடிவ அமைப்பில் பொருத்துவர். அத்தகட்டின் மீது மை சீராக விழுந்து செய்திக் காகிதத்தின் மீது அச்சுப் பதியத் தொடங்கும். ஆப்செட் இயந்திரங்களைப் பத்திரிகைகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றன. ஆப்செட் முறையே, வண்ணப் படங்களைச் சிறப்பாக வெளியிட ஏற்ற அச்சுமுறை ஆகும். தி ஹிந்து, தி டைம்ஸ் ஆப் இந்தியா, தினமலர், தினபூமி போன்ற பல பத்திரிகைகள் ஆப்செட் முறையில்தான் அச்சிடப்படுகின்றன. இவ்வகை முறையில் மணிக்கு 50,000 பிரதிகள் அச்சிட முடியும்.

வார, மாத இதழ்கள் மற்றோர் அச்சு முறையைப் பயன்படுத்தி வருகின்றன. அது ‘கல்லச்சு முறை’ எனப்படும். அமிலத்தின் உதவியால் தகடு அல்லது கல்லில் உருவம் பொறிக்கப்படுகின்றது. பின் அதன் மீது உரிய வகையில் மை நிரப்பப்பட்டு ரோட்டரி இயந்திரம் மூலம் அச்சடிக்கப்படுகின்றது. இம்முறையில் தெளிவான அச்சுப்படிகளைப் பெறமுடிகிறது. இருப்பினும் இது மிக மென்மையாகக் கையாளவேண்டிய அச்சுமுறை என்பதால் வார, மாதப் பத்திரிகைகளுக்கே இது பொருந்தும்.

அச்சுப் பிரிவின் மூலம் செய்தித்தாளை வெளியிடுவதுடன் செய்தி அலுவலகத்தின் ஒருநாளையப் பணி நிறைவுக்கு வருகிறது. படிகளைத் தனித்தனியாக முகவரி இட்டுக் கட்டி அவற்றை அலுவலகத்திற்குச் சொந்தமான வேன், பேருந்து, புகைவண்டி, விமானம் என்ற வகையில் அனுப்பி வைப்பதை விநியோகப் பிரிவின் பணியாளர்கள் கவனித்துக் கொள்கிறார்கள். இவர்களது பணி அதிகாலை நான்கு மணிக்குள் முடிவடைந்துவிடுகின்றது. இக்குழுவினர் கலைந்து சென்ற பின்னர்தான் பத்திரிகை அலுவலகம் அதாவது ஆசிரியர் பிரிவு விழிப்படைந்து, அடுத்தநாள் பணியைச் சுறுசுறுப்பாகத் தொடங்குகிறது.

### 6.2.3 அச்சுப்படி திருத்தும் பிரிவு

அச்சுப்படி திருத்துவோர் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர். எனினும், இவர்களைத் தனித்திறனுள்ள பிரிவினராகக் கருதுவதே செய்தி அலுவலக வழக்கமாக உள்ளது.

அச்சடிப்பதற்கு முன்னால் அச்சுக் கோத்தவற்றைப் படி எடுத்து அதனைச் சரிபார்ப்பவர்கள் அச்சுப்படி திருத்துவோர் (Proof Reader) எனப்படுவர். இப்படித் திருத்துவது இதழ்கள் பிழையின்றித் தரமுடன் வெளிவரத் துணைசெய்கின்றது. செய்தித்தாள் நிறுவனத்திற்காகப் பணிபுரிவோர் பலரும் தாம் அலைந்து சேகரித்த செய்திகள் செய்தித்தாளில் வெளிவரும்போது பார்த்து மகிழ்வர். பாடுபட்டுச் சேகரித்த செய்திகளைத் தவறில்லாமல் வாசகர் படிக்கும் முறையில் அச்சிட வேண்டியது நிறுவனத்தின் கடமை. எந்த ஒரு சிறு தவறும் செய்தித்தாளின் விற்பனையைப்

பாதித்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதனால், செய்தித்தாள் நிறுவனத்தில் பணிபுரியும் அச்சுப்படி திருத்துவோரின் பணி மிகவும் முக்கியமானதாகும்.

துணை ஆசிரியரால் எழுதப்பட்ட செய்திகள் அச்சுக் கோக்கப்படும் பகுதிக்கு அனுப்பப்படுகின்றன. அச்சுக் கோக்கும் பல முறைகளுள் ஒவ்வொர் அலுவலகமும் தனக்கு வாய்ப்பான ஒரு முறையைப் பின்பற்றி வரும். அந்த முறையில் அச்சுக் கோக்கப்படும். அச்சுக் கோக்கப்பட்ட அந்த வரிகள் மையொற்றப்பட்டு ஒரு தாளில் படியெடுக்கப்படும். அது திருத்தாப்படி (Proof) எனப்படுகிறது. இந்தத் திருத்தாப்படியில் தவறுகள் இருப்பது இயல்பு, ஏனெனில் அச்சுக் கோப்பவர் தனது கவனக் குறைவினாலும், இயந்திர அச்சுக் கோப்பு முறையாயின் அச்சு இயந்திரத்தின் பழுதினாலும் தவறுகள் ஏற்படுவது இயல்பாகும். இத்தவறுகள் படிதிருத்துவோரால் கண்டுபிடிக்கப்பட வேண்டும். படிதிருத்துவோர் தம் பணியை மிகவும் கவனமாகச் செய்ய வேண்டும். ஒரு சிறிய காற்புள்ளி கூட, சொல்லவரும் செய்தியின் பொருளையே மாற்றிவிடும் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

படிதிருத்தும் முறைகளைப் பின்பற்றித் தவறுகளைத் திருத்தி, நாளிதழ்கள் பிழையின்றித் தரமாக வெளிவரப் படி திருத்துவோர் உதவ வேண்டும். அச்சுப்படியைச் சரிபார்க்கும் போது கையாளப்படும் குறியீடுகளைத் தெளிவாகவும் முறையாகவும் குறித்தல் வேண்டும். படி திருத்துபவர் குறிப்பது அச்சுக் கோப்பவருக்குப் புரிய வேண்டும். எல்லோரும் அறிந்த குறியீடுகளைப் பயன்படுத்துவதே முறையாகும். படிதிருத்துவோர் தாமாகப் புதிய முறையைப் பயன்படுத்தி மற்றவர்களைக் குழப்பக் கூடாது.

ஒரே வரியில் பல பிழைகள் இருப்பது சில இடங்களில் குழப்பம் தரலாம். இத்தகைய இடங்களில் முழு வரியையும் அடித்துவிட்டு மீண்டும் சரியான வரியைத் தெளிவாக எழுதிக் காட்டுவது நல்லது.

## 6.3 தொகுப்புரை

செய்தித்தாள் பல பிரிவினரின் கூட்டு முயற்சியால்தான் வெளியிடப்படுகின்றது. ஏதாவது ஒரு பிரிவின் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும் செய்தி வெளியீட்டில் சுணக்கம் ஏற்படும். பொதுவாக ஆசிரியர் பிரிவு, இயந்திரப் பிரிவு, அச்சுக் கோக்கும் பிரிவு அல்லது அச்சு வார்ப்புப் பிரிவு, படங்களை உருவாக்கும் பிரிவு, அச்சுப்படி திருத்தும் பிரிவு என்று செய்தித்தாளின் உருவாக்கப் பணி ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ஆசிரியர் குழுவினர்தான் செய்திகளை எழுதுகின்றனர். அச்சுக் கோக்கும் பிரிவில் கையால் அச்சுக் கோத்தல், தனியெழுத்து அச்சுக் கோத்தல், தொடர் எழுத்து அச்சுக் கோக்கப்படுகிறது. சில நாளிதழ்களில் அச்சு வார்ப்பு நடைபெறும் முறையுண்டு என்பதால் அம்முறைகளையும் இப்பாடத்தின் அச்சு வார்ப்புப் பகுதி விளக்குகின்றது. படங்களைப் படக்கட்டைகளாகச் செய்யும் முறைகளைப் படக்கட்டை செய்யும் பகுதியில் காணலாம். அச்சடிக்கும் பிரிவின் பல்வேறு பணிகளும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. அச்சுப்படி திருத்தும் பிரிவு மிகவும் இன்றியமையாதது. ஒரு நாளிதழ் தரமாக, பிழையின்றி வெளிவர மொழி அறிவு பெற்ற படிதிருத்துபவரின் பணி மிகவும் இன்றியமையாதது என்பதும் இப்பாடத்தில் சுட்டப்பட்டுள்ளது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# P20441 தன்மதிப்பீடு : விடைகள் - I

1. அச்சுப்படி திருத்துபவரின் தகுதி யாது?

விடை:அச்சுப்படி திருத்துபவர் மொழியறிவுடையவராகவும் பொறுப்புடன் பிழை திருத்துபவராகவும் இருக்க வேண்டும்.

2. செய்திகளில் முரண்பாடு இருந்தால் அதை எவர் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்?

விடை:துணையாசிரியரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்

3. திருத்துவோருக்குரிய அறிவுரைகளில் ஒன்றைக் குறிப்பிடு.

விடை:தொடர்களின் அமைப்புப் பாதிக்காமல் திருத்தங்கள் செய்ய வேண்டும்.

முன்

# P20441 தன்மதிப்பீடு : விடைகள் - II

1. திருத்தக் குறியீடுகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?

விடை:ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்

2. அச்சடித்திருக்கும் சொல்லையோ, எழுத்தையோ நீக்க எத்தகைய குறியீடு இட வேண்டும்?

விடை:நீக்குவதற்கு Dt. என்று குறியீடு இடவேண்டும்.

3. இடைவெளி விட வேண்டாம் என்பதற்கு எத்தகைய குறியீடு இட வேண்டும்?

விடை:இடைவெளி விடாமலிருப்பதற்கு என்ற குறியீடு இடவேண்டும்.

முன்

# P20442 தன்மதிப்பீடு : விடைகள் - I

1. பத்திரிகையின் செய்திகளை யார் யாரெல்லாம் செம்மையாக்கம் செய்கின்றனர்?
விடை:ஆசிரியர், துணையாசிரியர்.

2. செய்தியை வெளியிட்டவரின் பெயரை வெளியிட்டால் சிக்கல் ஏற்படும் என்ற சூழலில் என்ன செய்ய வேண்டும்?
விடை:அரசு வட்டாரங்கள், நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று பொதுவாகக் குறிப்பிடவேண்டும்.

3. செய்தியின் மதிப்பு எப்போது உயரும்?
விடை:தேவையற்ற செய்திகளையும் தொடர்களையும் நீக்கல், எளிய மொழிநடை, பொருள் குழப்பமின்மை, தெளிவு, செய்தியின் நம்பகத்தன்மை முதலியன செய்தியின் மதிப்பை உயர்த்தும்.

முன்

# P20442 தன்மதிப்பீடு : விடைகள் - II

1. சிறப்புக் கூறுகள், கட்டுரைகள் ஆகியவற்றை யார் யார் எழுதுகின்றனர்?
விடை:துணையாசிரியரோ, சுதந்திர எழுத்தாளரோ எழுதுவர்.

2. பத்திரிகைகளில் பயன்படுத்தப்படும் செம்மையாக்கக் குறியீடுகளைக் கூறுக.
விடை:செம்மையாக்கக் குறியீடுகளில் முக்கியமானவை:

1 கேள்விக்குறி ?
2 ஆச்சரியக்குறி !
3 கால்புள்ளி ,
4 அரைப்புள்ளி ;
5 முக்கால்புள்ளி (கோலன்) :
6 முற்றுப்புள்ளி .
7 ஒற்றை மேற்கோள் ‘ ’
8 இரட்டை மேற்கோள் “ ”
9 சிறுகோடு -

முன்

# P20443 தன்மதிப்பீடு : விடைகள் - I

1. தமிழ் இதழ்களின் மொழிநடையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியவர் யார்?
விடை:தமிழ் இதழ்களின் மொழிநடையில் பெரிய மாற்றத்தை உருவாக்கியவர் திரு.வி.கலியாணசுந்தரனார்.

2. திரு.வி.க. நடத்திய பத்திரிகைகள் யாவை?
விடை:நவசக்தி, தேசபக்தன் ஆகிய இதழ்களை நடத்தினார்.

3. தமிழில் மொழிநடை நூலை உருவாக்கியப் பெருமை பெற்றவர் யார்?
விடை:தமிழில் மொழிநடை நூலை உருவாக்கிய பெருமை பெற்றவர் சி.பா. ஆதித்தனார்.

4. இதழியல் மொழிநடை எவ்வாறு இருக்க வேண்டும்?
விடை:சொல்லவரும் கருத்துகளை நேரடியாகச் சொல்ல வேண்டும். சுற்றி வளைத்துச் சொல்லக் கூடாது.

முன்

# P20443 தன்மதிப்பீடு : விடைகள் - II

1. இதழ்களில் நிறுத்தக் குறிகள் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன?

விடை:இதழ்களில் நிறுத்தக் குறிகள் மொழித் தெளிவிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

2. இருபொருள்படும் சொற்களை இதழ்களில் பயன்படுத்தலாமா?

விடை:இருபொருள்படும் சொற்களை இதழ்களில் பயன்படுத்துவதை முடிந்தவரைத் தவிர்ப்பது நல்லது.

3. இதழியல் மொழிநடையில் செயப்பாட்டுவினையைப் பயன்படுத்தலாமா?

விடை:இதழ்களில் செயப்பாட்டுவினையை முடிந்தவரைத் தவிர்ப்பது நல்லது.

4. மொழிநடையில் திருத்தங்கள் ஏன் செய்யவேண்டும்?

விடை:வாசகர்கள் செய்திகளை எளிமையாக, முழுமையாகப் படித்துப் புரிந்துகொள்ளத் திருத்தங்களை இதழியல் மொழிநடையில் செய்தல் வேண்டும்.

5. செய்தி நிறுத்தம் என்றால் என்ன?

விடை:ஒரு பக்கத்தைத் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கும்போது பெரிய எழுத்துக்கள், இடைவெளிகள் ஆகியவை குறுக்கிட்டால் கண்கள் அந்த இடத்தில் தங்கிச் சிறிது ஓய்வு எடுக்கின்றன. அவ்வாறு அமைப்பதைச் செய்தி நிறுத்தம் என்பார்கள்.

முன்

# P20444 தன்மதிப்பீடு : விடைகள் - I

1. கணையாழி எவ்வகை இதழ்?
விடை:கணையாழி இலக்கிய இதழ்.

2. எந்தெந்த மாநிலங்களில் காலை 11 மணிக்கும் ஒரு காலை இதழ் வெளியிடப்படுகிறது?
விடை:புதுதில்லி, மும்பை, கொல்கத்தா ஆகிய நகரங்களில்.

3. இக்கால இதழ்களின் நோக்கம் என்ன?
விடை:விற்பனையைப் பெருக்கி வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே நோக்கம்.

4. தமிழகத்தில் வெளியிடப்பட்டு வரும் இரண்டு புலனாய்வு இதழ்களின் பெயர்களைக் கூறுக.
விடை:நக்கீரன், நெற்றிக்கண்.

முன்

# P20444 தன்மதிப்பீடு : விடைகள் - II

1. ஆச்சரியக்குறி எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

விடை:ஒரு நிகழ்ச்சி நடக்க வாய்ப்புள்ளதா என்ற நிலையின் போதும், சந்தேகத்தின் அடிப்படையில் கொடுக்கப்படும் தலைப்புகளுக்கும் ஆச்சரியக்குறி பயன்படுத்தப்படுகிறது.

2. அரைப்புள்ளியின் பயன்பாடு என்ன?

விடை:அரைப்புள்ளி நாளிதழ்களில் தொடர் அமைப்புகளைச் சீர்படுத்தவே பயன்படுத்தப்படுகிறது.

3. இரட்டை மேற்கோள் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

விடை:ஒருவர் சொன்ன சொற்றொடரை மாற்றாமல் முழுவதுமாக அப்படியே வெளியிட இரட்டை மேற்கோள் பயன்படுத்தப்படுகிறது.

முன்

# P20445 தன்மதிப்பீடு : விடைகள் - I

1. அச்சிட வேண்டிய எழுத்துக்களை முற்காலத்தில் எவற்றில் செதுக்கினர்?
விடை:அச்சிட வேண்டிய எழுத்துக்களை முற்காலத்தில் பலகையிலும் கல்லிலும் செதுக்கினர்.

2. ‘நாரா’ என்றால் என்ன?
விடை:மரத்துண்டுகளில் செதுக்கப்பட்ட விதவிதமான உருவங்களைக் கொண்டு நெசவுத் துணிகளில் அச்சிடுவது ‘நாரா’ எனப்படும்.

3. தொடக்கக் காலங்களில் எந்த நாட்டில் காகித நாணயம் அச்சடிக்கப்பட்டது?
விடை:தொடக்கக் காலங்களில் சீனாவில் காகித நாணயம் அச்சிடப்பட்டது.

4. அச்சுக்கலையின் தந்தை யார்?
விடை:அச்சுக்கலையின் தந்தை ஜான் கூடன்பெர்க்

5. எந்த ஆண்டு தரங்கம்பாடிக்கு அச்சுப்பொறி கொண்டு வரப்பட்டது?
விடை:1713ஆம் ஆண்டில் தரங்கம்பாடிக்கு அச்சுப்பொறி இயந்திரம் கொண்டுவரப்பட்டது.

6. அச்செழுத்துக்களை அடுக்கப் பயன்படும் முறைகள் யாவை?
விடை:அச்செழுத்துக்களை அடுக்க, கையால் அச்சுக் கோப்பது, அச்சுவார்ப்புப் பொறியின் மூலம் அச்சுக் கோத்தல் என்னும் இரண்டு முறைகள் பயன்படுகின்றன.

7. அச்சு வார்க்கும் பொறிகளின் வகைகள் யாவை?
விடை:அச்சுவார்க்கும் பொறிகள் (1) தனி எழுத்து அச்சு வார்ப்பு முறை, (2) தொடர் எழுத்து அச்சு வார்ப்பு முறை என்று இரண்டு வகைப்படும்.

முன்

# P20445 தன்மதிப்பீடு : விடைகள் - II

1. தொடர் எழுத்து அச்சுவார்ப்புப் பொறியின் அமைப்பு எப்படியுள்ளது?
விடை:தொடர் எழுத்து அச்சுவார்ப்புப் பொறியின் அமைப்பு

(1) பொத்தான் அமைப்பு,
(2) சக்தியூட்டி,
(3) அச்சுவார்க்கும் பொறி,
(4) அச்சுக்களை வெளியிடும் பொறி

என்று நான்கு முறைகள் இருக்கும்படி அமைக்கப்படுகின்றது.

2. படப்பதிவிற்குத் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முறைகள் யாவை?
விடை:தற்காலத்தில் படப்பதிவிற்கு.

(1) மரத்தைச் செதுக்கிப் பதிப்பிப்பது,
(2) உலோகத்தைச் செதுக்கிப் பதிப்பிப்பது,
(3) அரித்தல் முறை,
(4) எழுத்தச்சுப் படிம முறை

என்று பல்வேறு முறைகள் உள்ளன.

3. பல்வேறு வண்ணங்களில் அச்சிடுவதற்குப் பயன்படும் முறை யாது?
விடை:பல்வேறு வண்ணங்களில் அச்சிடுவதற்குத் தற்காலத்தில் எழுத்தச்சுப் படமுறை எனப்படும் லித்தோகிராபி முறை பயன்படுகிறது.

4. டெலி வியூ முறையைப் பின்பற்றும் செய்தித்தாள்கள் எவை?
விடை:டெலிவியூ முறையை ஜப்பானில் உள்ள அஷகி ஷிம்புன், ரஷ்யாவிலுள்ள ப்ராவ்தா ஆகிய இதழ்கள் பின்பற்றுகின்றன.

முன்

# P20446 தன்மதிப்பீடு : விடைகள் - I

1. தற்போது நாளிதழ்களில் அதிகமாக அச்சுக் கோக்கப் பயன்படுத்தப்படும் முறை எது?

விடை:தற்போது நாளிதழ்களில் அச்சுக் கோக்க அதிகமாகப் போட்டோ டைப் செட்டிங் முறை பயன்படுத்தப்படுகிறது.

2. போட்டோ டைப் செட்டிங் முறையில் அச்சுக் கோப்பிற்குப் பின் செய்தித்தாளின் படிகள் எந்தத் தாளில் பதிவு செய்யப்படும்?

விடை:போட்டோ டைப் செட்டிங் முறையில் அச்சுக் கோத்த பிறகு செய்தித்தாளின் படிகள் புரோமைடு தாளில் பதிவு செய்யப்படும்.

3. அச்சு வார்ப்புப் பிரிவில் பக்கங்களின் மீது வைத்து அழுத்தப்படும் கட்டையின் பெயர் என்ன?

விடை:அச்சு வார்ப்புப் பிரிவில் பக்கங்களின் மீது மேட் என்னும் கட்டையை வைத்து அழுத்துவர்.

முன்

# P20446 தன்மதிப்பீடு : விடைகள் - II

1. ஆப்செட் முறையில் வண்ணப் படங்களை அச்சிட முடியுமா?

விடை:ஆப்செட் முறையில் வண்ணப் படங்களைச் சிறந்த முறையில் அச்சிட முடியும்.

2. அச்சுப்படி திருத்துபவர் எப்படிப்பட்ட குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும்?

விடை:எல்லோரும் அறிந்த குறியீடுகளையே அச்சுப்படி திருத்துபவர்கள் பயன்படுத்த வேண்டும்.

முன்